# அரசியல் அமைப்பு நகல் பத்திரம் சபையில்


Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 169
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆடி 14 ஜமா. அவ் 25 வியாழக்கிழமை [30-7-70]



**ஈழநாடு சந்தா**

| | தினப்பதிப்பு | வாரப் பதிப்பு |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 18-00 | ரூ. 4-00 |
| 6 மாதம் | ரூ. 34-00 | ரூ. 7-50 |
| வருடம் | ரூ. 66-00 | ரூ. 14-00 |

முற் பணம் கட்டவேண்டும். தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.


# தாக்கல்

## 'உறுப்பினருக்கு அலவன்ஸ் வேண்டும்'

--ஜே. ஆர்.

கொழும்பு, புதன்

**புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தை வரைவதற்கான அடிப்படைக் கோட்பாடுகள் அடங்கிய நகல் பத்திரம் இன்று அரசியல் நிர்ணயசபையில் சமர்ப்பிக்கப்பட்டது.**

முதல்முறையாக அரசியல் நிர்ணயசபை கூடியபோது அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா நகல் பத்திரத்தை சமர்ப்பித்து அதற்கான ஒழுங்கு முறைகளையும் சபையில் விளக்கிப் பேசினர்.

நகல் திட்டத்தை அரசியல் நிர்ணயசபை உறுப்பினர்கள் ஆராய்ந்தபின்னர் இயக்க விஷய செயற்குழுவிடம் சமர்ப்பிக்கப்படுமென்றும் இயக்க விஷய செயற்குழு பொதுமக்களின் ஆலோசனைகளைப் பெற்று பின்னர் அரசியல் நிர்ணய சபையிடம் சமர்ப்பிக்கும் என்றும் சபையில் தெரிவிக்கப்பட்டது.

சகல அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களின் கருத்துக்களும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்றும் சமஷ்டிக்கட்சியினரும் தங்களது பிரச்னைகளை சபையில் விளக்கக்கூடிய முறை

(4-ம் பக்கம் பார்க்க)

# கலகத்தை தூண்டும் நோக்குடன் வடக்கில் வாலிபர் இயக்கமா?

## உயர்தர பொலிஸ் அதிகாரிகள் பரிசீலனை

யாழ்ப்பாணம், வியாழன்

**தென்னிலங்கையில் கலவரத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் வடபகுதியில் அரசாங்கத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் வாலிபர் குழு ஒன்று இயங்கி வருகிறதா என்பது பற்றியும், இந்த வாலிபர் குழுவிற்கும் எந்த அரசியற் கட்சிக்கும் நெருங்கிய தொடர்புள்ளதா என்பது பற்றியும் நேற்று நடந்த இரகசிய பொலிஸ் உயர்தர மகாநாட்டில் ஆராயப்பட்டது எனத் தெரியவருகிறது.**

இம்மகாநாட்டில் சி. ஐ. டி. பொலிஸ் அதிபர் திரு. லயனல் செனநாயக்கா, சி. ஐ டி. உதவிப் பொலிஸ் அதிப திரு. எஸ். கே. சந்திரசேகரா, வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம், மற்றும் பொலிஸ் உயர்தர அதிகாரி...

மந்திரிகள் வடபகுதிக்கு வரும்போது அவர்களுக்கு எதிராக கறுப்புக் கொடி ஆ[illegible]பாட்டத்தில் ஈடுபடுவதற்கும் அரசாங்கத்திற்கு எதிராக துண்டுப்பிரசுரங்கள் வெளி[illegible] வாலிபர்குழு [illegible] எடுத்து வருகிறது என்பது...

போன்ற இந்த வாலிபர்குழு திரைமறைவு நடவடிக்கைகளைக் கையாண்டு வருவதாகவும் தெரிவிக்கப்[illegible]பட்டது.

இந்த நடவடிக்கைகளைத் [illegible] வடபகுதியில் உள்ள வாலிப முன்னணித் தலைவர்களின் நடவடிக்கை...

## மாங்குளம் முக்கொலை வழக்கு: நான்காவது தினமாக விசாரணை

யாழ்ப்பாணம், வியா.

மாங்குளம் முக்கொலை வழக்கு நேற்றுக்காலை வட பகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஏ. எல். எஸ். சிறிமானே முன்னிலையில் நான்காவது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

நேற்றைய விசாரணையின் போது வவனியா பதில் மாஜிஸ்திரேட் திரு. சின்னத்தம்பிசாட்சியமளித்தார் அவர் சாட்சியமளித்தபோது பொலிஸ் சார்ஜனினல் 1ம் எதிரி தன்முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டதாகவும் அவரை பிஸ்காலில் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டதாகவும் தெரிவித்தார்.

இவ்வழக்கில், மாங்குளத்தில் 68ம் ஆண்டு ஜூலை 2-ம் திகதி வில்லியம். பியரத்ன ஆகியோர் செல்லத்துரை, சின்னையா. பால்ராஜ் ஆகியோரை கொலைசெய்ததாக குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் ஜே, ஹெரத், வழக்கறிஞர் சேளி செனிவரத்ன வின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் அட்வகேட் சிவா. நாகராசா நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் குமார் அபயசேகரா ஆஜரானர். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## இரு குழந்தைகளின் தந்தை தற்கொலை!

## ஆகஸ்ட் 10-ல் ஆசிரியர்கள் ஓய்வு

கொழும்பு, புதன்

ஆகஸ்ட் மாதம் 10-ம் திகதி முதல் 55 வயது பூர்த்தியடையும் சகல ஆசிரியர்களும் இளைப்பாறவேண்டும்''

இவ்வாறு கூறும் சுற்றறிக்கைகளை கல்வி அமைச்சர் சகல பிராந்திய கல்வி அதிபதிகளுக்கும், அனுப்பி வைத்துள்ளார்.

55 வயது பூர்த்தியடையும் ஆசிரியர்கள் ஒருவருடகாலசேவை நீடிப்புப்பெற வசதிசெய்யப்பட்டுள்ளதாயும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை-இஸ்ரேல் உறவு துண்டிப்பு

## இஸ்ரேல் ஆழ்ந்த கவலை

கொழும்பு, புதன்

இலங்கை அரசாங்கம் இஸ்ரேலுடனுன ராஜதந்திரீக உறவை தற்காலிகமாக இன்றுமுதல் நிறுத்தியுள்ளது இது சம்பந்தமான இலங்கை - இஸ்ரேல் தூதரக துணைத் தலைவருக்கு அரசாங்கம் அனுப்பி வைத்துள்ள அவசர அறிவித்தல் ஒன்றில் இலங்கையுடனுன இஸ்ரேல் தொடர்புகளை துண்டிப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மே[illegible]ற்கொள்ளும்படி கேட்டுக் கொண்டுள்ளது.

இது சம்பந்தமாக இஸ்ரேல் தூதுவராலயத்தில் [illegible]த்திரிகையாளர் மகாநாடு ஒன்றை துணைத்தலைவர் கூட்டினர். இலங்கையின் இத்திடீர் முடிவு கவலையளிக்கக் கூடியதென்றும் மத்திய கிழக்குப் பிரச்னை பற்றிய சமாதானப்பேச்சுவார்த்தை நடைபெறும், இவ் வேளையில் இலங்கையின் இம்முடிவு விசனத்துக்கு உரியது என்றும் இஸ்ரேல் அதிகாரி தெரிவித்தார்.

இலங்கையில் உள்ள இஸ்

(4-ம் பக்கம் பார்க்க)

# பாரிஸில் தமிழ்ச்சங்கம் உதயம்!

## கலாநிதி கைலாசபதி தகவல்

கொழும்பு, வியா.

மலேஷியாவிலுள்ள ...

வாராய்ச்சி மாநாடு பயனைத் தந்தது எனக் கூறலாம்''

இருந்து இம்மாநாட்டில் கலந்துகொண்ட வருமான ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வழக்கில், மாங்குளத்

# இரு குழந்தைகளின் தந்தை தற்கொலை!

பூநகரி, புதன்

இரு குழந்தைகளின் தந்தையான மாதர் சின்னராசா என்பவர் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்து கொண்டார். இச்சம்பவம் பூநகரி ஞானிமடத்தில் நடந்துள்ளது.

பூநகரி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. ரி. பரமசாமி மரணவிசாரணை நடத்தினார்.

இறந்தவர் காலையிலிருந்தே மதுவெறியில் காணப்பட்டாரென்றும், நண்பர்களுக்கு மது வாங்கிக்கொடுத்ததாகவும் தான் மருந்து குடிக்கப் போவதாகவும் மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## உகண்டா விலகினால்

# பிரி. பிரஜைகள் வெளியேற்றப்படுவர்

கம்பாலா, ஜூலை 29

பிரிட்டன் தென்னாபிரிக்காவுக்கு மீண்டும் ஆயுதங்கள் விற்பனை செய்யத் தொடங்கினால் காமன்வெல்த் அமைப்பிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும் என்று உகண்டா அதிபர் ஒபட்டே தெரிவித்த யோசனையை உகண்டா ஆட்சி மன்றத்தின் தேசியசபை ஒருமனதாக ஏற்றுக் கொண்டது.

காமன்வெல்தி லிருந்து விலகிக்கொண்டால் உகண்டாவிலிருக்கும் பிரிட்டிஷ் காரர் அனைவரும் வெளியேற்றப்படுவார்களென்று உகண்டா வெளிநாட்டமைச்சர் தெரிவித்தார்.

# மாணவருக்கு காற்சட்டை! 'சலுசலா' வழங்குகிறது

கோட்டை, புதன்

'லங்கா சலுசல' பாடசாலை மாணவர்கள் அணியக்கூடிய நீலநிறக் காற்சட்டைகளை விற்பனை செய்யும்.

பாடசாலை செல்லும் ஏழை மாணவர்கள் காற்சட்டைகளைக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள முடியாத கஷ்டத்தைப் போக்கவே இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காற்சட்டை ஒன்றின் விலை ரூ 6 25 சதம். ஒவ்வொரு அளவில் இந்தக் காற்சட்டைகள் தயாரிக்கப்படுகின்றன.

இறக்குமதி செய்யப்படும் துணிகள் போன்று இங்கும் துணிகள் தயாரிக்க 'சலுசல' நடவடிக்கை எடுத்துள்ளது.

# கள்ளிறக்கும் தொழிலாளர் ஊதியம் அதிகரிக்கும்

கோட்டை, புதன்

நாடு பூராவும் இருக்கும் கள்ளிறக்கும் தொழிலாளர்களுக்கு வளங்கப்பட்டுவரும் கூலிகளை கணிசமான அளவு அதிகரிப்பதுபற்றி நேற்றுக்கூடிய கள்ளிறக்கும் தொழிலாளர் ஊதிய நிர்ணயசபை முடிவுசெய்துள்ளது.

எட்டு ஆண்டுகளின் பின்னர் இவ்வாறு இத்தொழிலாளர்களின் ஊதியங்களை கூட்டுவதற்கு ஏற்பாடுசெய்யப்படுகின்றது. புதிய திட்டமொன்றின்படி நாட்டின் ஒவ்வொரு பிரதேசத்திற்கு மேற்ற வகையில் அப்பிரதேசங்களில் உள்ள கள்ளிறக்கும் தொழிலாளர்களின் ஊதியத்தை 38 அல்லது 54 சதவீதம் கூட்டுவதற்கு முடிவுசெய்யப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இப்பொழுது வழங்கப்படும் 72 சதம் ரூ. 1-10 சதமாக உயர்த்தப்படலாம் என்று தெரிகின்றது,

சி. ஐ டி. உதவிப் பொலிஸ் அதிபர் திரு. எஸ். கே. சந்திரசேகரா, வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம், மற்றும் பொலிஸ் உயர்தர அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

உடும்பராயில் நடந்த கைக்குண்டு சம்பவத்தில் சந்தேக நபர்களில் ஒருவர் கைக்குண்டு தயாரிப்பதாக ஒப்புக் கொண்டதாகவும், இம்மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டதாம். கைக்குண்டு தயாரிப்பதிலும், துப்பாக்கிகள் பாவிப்பதிலும் புதிய முறைகள் பற்றி வாலிபர் குழுவிற்கு பயிற்சி அளிக்கப்படுகிறதா என்றும் இந்த மகாநாடு ஆராய்ந்ததாக அறியப்படுகிறது.

தென்னிலங்கையில் கலவரத்தைத் தூண்டும் முயற்சிக்கு வடபகுதியில், எழுத்து அழிப்பு இயக்கமும் ஒரு நடவடிக்கையாக இருக்கலாம் என்றும் கருதப்பட்டதாம்.

மக்கள் அரசாங்கத்தின் [illegible]பாட்டத்தில் ஈடுபடுவதற்கும் அரசாங்கத்திற்கு எதிராக துண்டுப்பிரசுரங்கள் வெளியிடுவதற்கும் வாலிபர்குழு முயற்சி எடுத்து வருகிறது என்பது ப[illegible]யும் ஆராயப்பட்டதா[illegible].

தென்பகுதியில் உள்ள 'சேகுவேரா' இயக்கம் [illegible] தாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து வடபகுதியில் உள்ள வாலிப முன்னணித் தலைவர்களின் நடவடிக்கைகளை கண்காணிக்கும்படி, பொலிஸாருக்கு உத்[illegible] விடப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

# இடமாற்றத் திட்டம்: மந்திரிசபை ஏற்றது

கோட்டை, புதன்

அரசாங்க ஊழியர் இடமாற்றம்சம்பந்தமாகபொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டமைச்சர் திரு. பீலிக்ஸ் பண்டாரநாயக்காவின் திட்டத்தை மந்திரிசபை ஏற்றுக் கொண்டது:

புதிய இடமாற்றத் திட்டத்தின்படி செலவுத் தொகையைக் குறைப்பதற்கான சில நல்ல யோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன,

இடமாற்ற சபைகள் ஒவ்வொரு இலாகாக்களிலும் நியமிக்கப்பட்டு, அவர்களது ஆலோசனைகள் பெறப்படும்.

அரசு ஊழியருக்கு அரசியல் உரிமை வழங்குவது குறித்து பீலிக்ஸ் சமர்ப்பித்த அறிக்கையையும் மந்திரிசபைஏற்றுக்கொண்டது.

தேர்தல் இலாகா ஊழியர்கள் அரசியலில் பங்குபற்ற முடியாது என்ற விதி மாற்றுத் திட்டமொன்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் உத்தியோகத்தர்கள் அரசியலில் பங்குபற்ற விரும்பினால், அவர்கள் வேறு இலாகாக்களுக்கு மாற்றப்படுவார்கள் என்றும் மந்திரிசபையில் தெரிவிக்கப்பட்டது.

# 'பிரயாணிகளுக்கு சிறந்த சேவை செய்ய வேண்டும்'

பருத்தித்துறை. புதன்

இ. போ. ச. ஊழியர் பொது மக்களின் பாராட்டைப் பெறக்கூடிய முறையில் ஒழுங்கான சேவை செய்ய வேண்டியது அவசியம். அதே நேரத்தில் தமது நலவுரிமைகளையும் பேண வேண்டும்,

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போ தொழிலாளரின் ஆலோசனைக் கமிட்டியின் உத்தியோகபூர்வமான முதலாவது கூட்டம் நேற்று முன்தினம் டிப்போ ஆலோசனை மண்டபத்தில் உதவி முகாமையாளர் திரு. வி. சபாபதி தலைமையில் நடைபெற்றபோது மேற்படி தீர்மானம் நிறவேற்றப்பட்டது. டிப்போவில் நிலவும் ஒழுங்கீனங்கள் ஊழல்கள் என்பனவற்றை நீக்கவும் முதல் முயற்சிகள் வேண்டுமென்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

கமிட்டியின் தலைவராக திரு. ரி. துரைராசாவும் உபதலைவராக திரு. வீ. காங்கேசுவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் 4-ம் திருவிழாவான இன்று மாலை 6—7-30 மணிவரை திருப்பூங்குடி வி. க. ஆறுமுகம் அவர்களால் 'பக்த கௌரி' என்ற பொருள் பற்றிய கதாப்பிரசங்கமும் இரவு 7-30 மணிக்கு வசந்த மண்டபபூசையும் சுவாமி யானை வாகனத்தில் வீதிவலம் வருதலும் இரவு 8-15—9-45 மணிவரை திரு இ[illegible]நமசிவாயம் அவர்களின் இன்னிசைக் கச்சேரியும் நிகழும்

## கைதிகள் மீது துப்பாக்கிச்சூடு

### சிலர் காயம்

அநுராதபுரம், புதன்

அநுராதபுரம் சிறைச்சாலையில் நேற்று கைதிகள் தப்பி ஓட முயற்சித்தபோது நடந்த துப்பாக்கிப்பிரயோகத்தில் சில கைதிகள் காயமடைந்தனர். சிறையில் வழங்கப்படும் உணவுபற்றி கைதிகள் அதிருப்தி அடைந்திருந்தனராம். சிறிபால சில்வா என்ற கைதி தாக்கப்பட்டதைத் தொடர்ந்து இச் சம்பவம் நடைபெற்றதாக கூறப்படுகிறது.

ஒஸ்மானியாக்கல்லூரி

## அதிபர் இடமாற்றம் ரத்து

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக்கல்லூரிஅதிபர் ஜனாப் எம். எம். ஏ. அப்துல்குத்தூஸ் இடமாற்றம்செய்யப்பட்டதை ஆட்சேபித்துத் தாங்கள்நடத்திய ஆர்ப்பாட்டம் வெற்றியளித்துள்ளதாகவும் அவரின் இடமாற்றம் ரத்துச் செய்துள்ளதாகவும்ஒஸ்மானியாக் கல்லூரி மாணவர்கள் சிலர் தெவிக்கின்றனர்

# கொழும்புக்குவந்த கப்பலைக்காணவில்லை

சென்னை' ஜூலை 29

தூத்துக்குடியிலிருந்து கொழும்புநோக்கி வந்துகொண்டிருந்த சரக்குக் கப்பல் ஒன்றைக் காணவில்லை என அறிவிக்கப்படுகிறது.

இம்மாதம் 21-ம் திகதி தூத்துக்குடியிலிருந்து புறப்பட்ட குறிப்பிட்ட கப்பல் இம்மாதம் 25-ம் திகதியே கொழும்புத் துறைமுகத்துக்கு போய்ச் சேர்ந்திருக்க வேண்டும் என்றும், இன்றுவரை கப்பல் கொழும்பு போய்ச் சேரவில்லையென்றும் தமிழ்நாடு அரசாங்கம் அறிவித்தது.

4 நாட்களில் இக்கப்பல் கொழும்பு போய்ச் சேர்ந்திருக்க வேண்டும். கப்பலுக்கு என்ன நேர்ந்ததுஎன்பது பற்றிய தகவல் எதுவும் தமிழ்நாடு அரசுக்கு கிடைக்கவில்லை. கடற்படையினரின் உதவி அவசரமாகக் கோரப்பட்டுள்ளது.

... உதயம்!

## கலாநிதி கைலாசபதி தகவல்

கொழும்பு, வியா.

மலேஷியாவிலுள்ள கோலாலம்பூரில் நடந்த முதலாவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு பொது மக்களையும் அறிஞர்களையும் கொண்டதாய் சிறப்படைந்தது. சென்னையில் நடந்த இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு பொது மக்களை அதிக அளவில் கொண்டு சிறப்படைந்தது. பிரான்சின் தலைப்பட்டனமும் நாகரீகத்தின் உச்சத்திலுள்ளதுமான பாரிசில் நடந்த மகாநாடு அறிஞர்களைக் கொண்டு திகழ்ந்தது. எல்லாவற்றையும் தொகுத்துப் பார்க்கையில் இவ்வாராய்ச்சி மாநாடு பயனைத் தந்தது எனக் கூறலாம்''

இவ்வாறு இலங்கைப் பல்கலைக்கழகதமிழ்விரிவுரையாளரும், இலங்கையில் இருந்து இம்மாநாட்டில் கலந்துகொண்டவருமான கலாநிதி கைலாசபதி கூறினார். அவர் இன்று கொழும்பு திரும்பினார்.

அவர் மேலும் கூறுகையில் இங்கிலாந்திலுள்ள தமிழ் மாணவர்களும் பாரிஸ் மகாநாட்டில் கலந்துகொண்டனர். பிரான்ஸ்நாட்டிலுள்ள தமிழ் மாணவர்கள் தமக்

(4-ம் பக்கம் பார்க்க)

## ரயில்விபத்து கமிட்டி நியமனம்

கொழும்பு, புதன்

புத்தளத்தில் நடைபெற்ற ரயில் - பஸ் விபத்து சம்பந்தமாக ஆராய்வதற்காக கமிட்டி ஒன்றை போக்குவரத்து அமைச்சர் நியமித்துள்ளார்.

ஐ. ஜினதாசா, ஏச். அகலவத்தை ஆகிய இருவரைக் கொண்ட கமிட்டி கதவுகள் இல்லாத ரயில் பாதைகளில் அவசரமாக கதவுகள்போட வேண்டிய இடங்கள் பற்றியும் ஆராயும்.

# வழமைபோல் ஆடி அமாவாசை தீர்த்தம்

யாழ்ப்பாணம், வியா

ஆடிஅமாவாசைத் தினத்தன்று மாவை ஆலய தீர்த்தோற்சவம் வழமைபோலவே நடைபெறுமென ஆலயதர்மகர்த்தா தெரிவித்திருப்பதால், அன்றைய தினம் ஆலயத்திலோ கீரிமலையிலோ எவ்வித தடையுமிருக்காது, அமைதியான முறையில் தீர்த்தோற்சவம் நடந்தேறும் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

தீர்த்தோற்சவம் அமைதியான முறையில் நடைபெற பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன. இதற்கான ஏற்பாடுகளை வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் மேற்கொண்டுள்ளார்.

கீரிமலை, மாவிட்டபுரம் பகுதிகளில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுமென்றும், இம்முறை தீர்த்தோற்சவம் வழமைபோல் அமைதியாகவும் சிறப்பாகவும் நடைபெறுமென்றும் பொலிஸ் வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன.

## பொலிஸ் தீவிர கண்காணிப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் தீர்த்தோற்சவத்தின் போது, எந்தப் பகுதியினராவது கலவரத்தை தூண்ட முயற்சித்தால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் கோயிலுக்கு வழிபட வரும், இந்துக்கள் எவராவது பயமுறுத்தப்பட்டாலோ, துன்புறுத்தப்பட்டாலோ பொலிஸார் தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள்.

வடபகுதி பொலிஸ் அதிபர் திரு ஆர். சுந்தரலிங்கம், நேற்று நமது நிருபரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: வருடாவருடம் தீர்த்தோற்சவத்திற்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் பலபாகங்களிலிருந்து வருவது போல், இம் முறையும் வருவார்கள். அதனல், கூட்டத்தை கட்டுப்படுத்தவும், போக்குவரத்து வசதிகளை செய்யவும், மாவிட்டபுரத்தில் மேலதிக பொலிஸார் கடமையாற்றுவார்கள். பொலிஸார் மாவிட்டபுரம் கோவில் வாசலிலிருந்து வாபஸ் பெற்ற பின்னர் எவ்வித சம்பவங்களும் நடைபெறவில்லை.

மாவிட்டபுரத்தில் சம்புரோச்சண கும்பாபிஷேகம் நேற்றுக் காலை நடைபெற்றது. கிழக்கு கோபுர வாசலில் உள்ள இரும்புக் கதவுகள் மூடப்பட்டிருந்தது. கோயிலுக்கு வழமையாக வரும் பக்தர்கள், வெளிவீதியில் நின்று வணங்கி விட்டுச் சென்றனர்.

கோயிலுக்குள் 11 குருக்கள் கும்பாபிஷேக நிகழ்ச்சியில் பங்குபற்றியுள்ளதாகவும், 4 தினங்கள் விசேஷ பூசைகள் நடைபெறுமென்றும் தெரிய வருகிறது.

கடந்த வருடம் போல் தீர்த்தோற்சவத்தை சிறந்த முறையில் செய்ய கோவில் நிர்வாகிகள் ஏற்பாடுகள் செய்துவருகின்றனர்.

வடக்கு வீதியிலும், தெற்கு வீதியிலும் கட்டப்பட்ட வெள்ளைக்கொடிகள் இன்னமும் அகற்றப்படவில்லை.

மாவை ஆலய நிர்வாகி, ஆதீனகர்த்தா ஆகியோருக்கு எதிராக அட்டோர்ணி ஜெனரல் யாழ்ப்பாணம் மாஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இன்று விசாரணை செய்யப்படவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரி - நல்லூர் வீதியில் நான்கு பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்குண்டு. லான்ட் இன்வெஸ்ட் மென்ஸ், 6, பிரதானவீதி, யாழ்ப்பாணம். 3014

C. E. 3395 லொறி V. 8. செவலட் எஞ்சின் நல்ல நிலைமையில் ஓடிக்கொண்டிருக்கிறது. (கம்பிக்கூடாரம்) நேரில் வந்து பார்த்து விலை கேட்கவும். மேலதிக எஞ்சின் ஒன்றும் கியர் பொக்ஸ் ஒன்றும் இருக்கிறது. பார்வை இடும் இடம் P. M. நாகரெட்ணம் செட்டியார், நிர் 15/17, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 567. 3018

காணி:

யாழ்ப்பாணம், புங்கங்குளம், கண்டி றோட் சந்திக்கும் புகையிரதநிலையத்திற்கும் இடையில் மூன்று பரப்பு வெற்று நிலம் லான்ட் இன்வெஸ்மென்ட், 6, பிரதானவீதி, யாழ்ப்பாணம். 3021

### தேவை

வண்ணார் பண்ணையில் காங்கேசன்துறை வீதி, மானிப்பாய் வீதிக்கண்மையாக குடியிருக்க வீடு தேவை. தொடர்பு கொள்ளவும். ஆனந்தம், 31, ஓட்டுமடம்வீதி, வண்ணார்பண்ணை. 3026

யாழ்ப்பாணம் - கட்டிடப்பகுதி மேற்பார்வையாளரும், அப்பகுதியில் வேலை பழக விரும்புவோரும் ஆங்கில அறிவுள்ள ஆண்களும், கட்டிடப் பகுதி படம் வரைந்து கணக்குப் போடுவோரும் அப்பகுதியில் வேலை பழக விரும்புவோர் G. C. E. ஆங்கிலம், கணக்குப் பாடமுள்ள ஆண்களும், பெண்களும் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் 3023, 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 3023

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியாழன் 30—7—70

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-15, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 மெல்லிசை, 7-30 திரைகானம், 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 நாளையசந்ததி

இரவு 6-00 லயவின்யாசம், 7-00திரைகானம், 7-15 வயலின், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 உரை, 9-40 பாட்டு, 10-30 செய்தித்தொகுப்பு.

— —

## நாட்டைக் காக்கும் நிதி

வல்வெட்டித்துறை, புதன்

வல்வை சிவகுரு வித்தியாசாலை ஆசிரியர்கள் தமது ஒருநாள் சம்பளத்தை நாட்டைக் காக்கும் நிதிக்கு கொடுத்துதவ முன்வந்துள்ளனர்.

### தேவை

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் லையிற்று எஞ்சின் (இயக்குனர்) றைவர் ஒருவர் தேவை. வயரிங் வேலையும் தெரிந்தவராயும் மெக்கானிக்குத் தெரிந்தவராயும் இருத்தல் உத்தமம் தகுதியின்படி சம்பளம் கொடுக்கப்படும் விரும்பியவர்கள் மேல்காட்டிய விலாசக் காரியதரிசிக்கு 15-8-70 திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும். நற்சான்றுகள் இருந்தால் பத்திரத்துடன் அனுப்பவும். கா. ஆறுமுகம், கௌரவ காரியதரிசி 3025


இன்று முதல்

வெஸ்லி சினிமா மானிப்பாய்

சத்தியன், ஷீலா, மது நடித்த

செம்மீன்

(ஈஸ்ட்மன் கலர் - மலையாளம்)

ராணி ஜெமினி — சௌகார்ஜானகி


## புதிய திட்டம்

அல்லைப்பிட்டி, புதன்

ஆயுள்வேத வைத்திய சபை, பதிவு செய்யப்பட்ட ஆயுள்வேத வைத்தியர்களால் வழங்கப்படும் வைத்திய அத்தாட்சிப்பத்திரங்களை கட்டுப்படுத்துமுகமாக ஆயுள்வேத ஆணையாளரால் பிரேரிக்கப்பட்ட ஓர் பிரேரணையை ஏகமனதாக ஏற்றுக்கொண்டுள்ளது. பொதுப் பாவிப்புக்கென சுகாதாரப் பகுதியினரால் வெளியிடப்படும் பத்திரத்தை ஒத்த வைத்திய அத்தாட்சிப் பத்திரங்களைப் பிரயோகப்படுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்படி பத்திரங்களை ஆயுள்வேத வைத்தியசபை அச்சடித்து இலக்கமிட்டு புத்தக வடிவில் விண்ணப்பதாரிகட்கு வழங்கும். இத்திட்டம் இவ்வாண்டு முடிவதற்குள் நடைமுறைக்கு வரும். அத்துடன் அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் தொழிலகங்கள் யாவும் மேற்படி பத்திரங்களில் எழுதப்படும் அத்தாட்சிப் பத்திரங்களையே ஏற்கும்படி கேட்டுக்கொள்ளப்படும்.

— —

## 'கல்வித்தர முயரப் பாடுபடுவேன்'

பருத்தித்துறை, செவ்.

'ஆசிரிய இடமாற்றப் பிரச்சினைகளில் அனாவசியமாகத் தலையிடமாட்டேன் மாணவர்களின் கல்வித்தரம் இவற்றைக் கருத்திற்கொண்டேயான் பணியாற்றுவேன். இவைசம்பந்தமாக அதிபர்களுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு எவ்வித முன்னேற்றத்தைச் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்வதே என்நோக்கம்'

இவ்வாறு உடுப்பிட்டி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. ஜெயக்கொடி தம்மைச் சந்தித்த அதிபர்களிடம் கூறியுள்ளார் அவர்மேலும் அதிபர்களிடம் தெரிவித்தவைவருமாறு;

ஆசிரியர்கள் பெற்றோர் ஆகியஇருசாராரும் நம்முடன் ஒத்துழைத்தால் எத்தனையோ விடயங்களைச் சாதிக்கலாம் அதனால் தொகுதி மக்கள் பயன்பெறுவார்கள்.

— —

## ஜே. பி. ஆக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், வியா

'நல்லூர்பகுதியில் வாழும் சிறுபான்மைத் தமிழ்மக்கள் அப்பகுதியில் சமாதான நீதவான் யாருமில்லாததால் நெடுந்தூரம் செல்ல வேண்டியிருக்கும் குறையை நிவர்

## இன்றைய பலன்

ஆடி மாதம் 14-ம் திகதி [30-7-70]

மேஷம்- வேண்டிய அளவிற்கு இன்று வெள்ளிப் பணம் துள்ளும்: புதிய நண்பர்களையும் தேடிக்கொள்ளுவீர்கள். கண்ணியமான தினம்.

ரிஷிபம்-சமயோசித புத்தி உங்களுக்குத் தாராளமான சிந்தனைகளைத் தேடித்தரும். உள்ளத்தில் உவகை துள்ளும். செல்வாக்கு வளரும்.

மிதுனம்- கடன் தொல்லைகள் கவலையைத் தரும் உறவினர்களுடன் பிணக்குகள் தோன்றும். நிதானம்வேண்டும்.

கடகம்- இனிய வார்த்தைகளின் மூலம் எல்லோரையும் வசீகரிப்பீர்கள். பொருள் வரவுக்கும் இடமுண்டு. இறை அருளும் உண்டு.

சிம்மம்- மேலதிகாரியின் கழுகுப்பார்வை உங்களை வட்டம் இடலாம். முன் யோசனையுடன் செயலாற்றுக

கன்னி- வாகன விருத்தியுடன் இல்லத்தில் திருப்தி காணும். மோகன வாழ்வு கிட்டும். முதியவர் ஆசி உண்டு. சுபதினம்.

துலாம்- கண் துடைப்பு வேலைகளால் நலிவுக்கு இடமேற்படும். உடல் நலமும் சிறிது பாதிக்கலாம். உணவு விடயத்தில் கவனம்வேண்டும்.

விருட்சிகம்- எதிர்பார்த்த முடிவில் ஏமாற்றம் தென்படும். உடன் பிறந்தவர்களாலேயே பல தொல்லைகள் தோன்றக்கூடும். காதல் உலகில் கனிவான சம்பவங்கள் நடைபெறும்.

மகரம்- நண்பர் ஒருவர் உம்மைத் தவறான பாதையில் இழுத்துச் செல்வார் மௌனம் நன்மை தரும்

கும்பம்- இன்று முன்னணியில் நிற்பீர்கள். நல்ல தீர்ப்பு வழங்கும் சந்தர்ப்பம் ஏற்படலாம் தெய்வ நம்பிக்கை மேலோங்கும்

மீனம்- தொழில் துறையில் நல்ல வருமானம் கிடைக்கும். வணிகர்களுக்கு ஆதாயமுண்டு. மகிழ்ச்சிகரமான பிரயாணமுமுண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## கனிஷ்ட பல்கலைக்கழக விளையாட்டுப்போட்டி

பருத்தித்துறை, புதன்

## கொழும்பு மாநகரசபை சிங்களத்தில் இயங்கும்

கொழும்பு புதன்

அடுத்தமாதம் தொடக்கம் கொழும்பு மாநகரசபை அலுவல்கள் அனைத்தையும் முற்றாக சிங்களத்திலேயே நடத்துவதென்று கொழும்பு மாநகரசபை முடிவு செய்திருக்கின்றது.

இப்பொழுதும்கூட பெரும்பாலான அலுவல்களை கொழும்பு மாநகரசபை சிங்களத்திலேயே நடத்துகின்றது.

(சி பி ஏ)

## நெசவு ஆசிரியர்

பச்சிலைப்பள்ளி, புதன

முள்ளியான் நெசவு நிலையத்தின் நெசவு ஆசிரியராகக் கடமையாற்றியவர் சிங்களத் தேர்ச்சியின்மை காரணமாய் அரசாங்கத்தால் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட பின் வத்திராயன் நெசவு நிலைய ஆசிரியரே இந் நெசவு நிலையத்தையும் கவனித்து வந்தார். கடந்த சில நாட்களாகப் பிரஸ்தாப ஆசிரியரும் லீவில் இருப்பதினால் இரண்டு நெசவு நிலையங்களிலும் நெசவு பயிலும் மாணவிகள் கஷ்டமடைகின்றனர்.


விற்பனைக்கு

ஓவியர்களுக்கும், பெயின்ரிங் வேலைசெய்பவர்களுக்கும், சேலை பிறின்ரிங் வேலைசெய்பவர்களுக்கும் உகந்த ஸ்பிறே பெயின்ரிங் கருவி!

எயர் கொம்பிரஸ்சர் இல்லாமல் மின்சாரத்தில் இயங்குவது, சுலபமாக எங்கும் கொண்டு சென்று வேலைசெய்யக்கூடியது!

Burgess Electric Spray Painting Equipment (British make)

கைவசம் இருப்பில் சொற்பமுண்டு. உங்கள் தேவைக்கு முந்திக்கொள்ளுங்கள்.

Burgess Engraving Machine என்கிறேவிங் மெசின் விற்பனைக்கு உண்டு விபரங்கட்கு:-

K. S. பாலசிங்கம், 90, கொழும்புத்துறை றோட், கொழும்புத்துறை தபால் கந்தோருக்கு முன்பாக, யாழ்ப்பாணம். 2384




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# செம்மீன்

(ஈஸ்ட்மன் கலர் - மலையாளம்)

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஜெமினி — சௌகார்ஜானகி நாகேஷ்- ஜெயந்தி நடித்த

## இரு கோடுகள்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

சிவாஜிகணேசன் இரு வேடங்களில் பத்மினி - ராகினி - தங்கவேலு நடித்த

# உத்தமபுத்திரன்

(புதிய கொப்பி)

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன் யாழ்ப்பாணம் திரைகளில்

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி

(போயா, பிரிப்போயா காலை 10-30)



★ ஏ.வி.எம்.ராஜன்

★ சௌகார்ஜானகி

★ நாகேஷ் ★ குமாரிசச்சு

சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்

★ கே. பி. சுந்தராம்பாள்

★ திருமுருக கிருபானந்தவாரியார்

மற்றும்பலர் நடித்த

'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும் தெய்வத் தமிழ்க் காவியம்'

# துணைவன்

கதை வசனம் பாலமுருகன்

சங்கீதம் K.V. மகாதேவன்

சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்


யாழ்ப்பாணம், வியா

'நல்லூர்பகுதியில் வாழும் சிறுபான்மைத் தமிழ்மக்கள் அப்பகுதியில் சமாதான நீதவான் யாருமில்லாததால் நெடுந்தூரம் செல்லவேண்டியிருக்கும் குறையை நிவர்த்தி செய்ய இப்பகுதிக்கென சமாதான நீதிபதியாக திரு. கே. குமாரசாமியை நியமிக்கவேண்டும் என நீதிமந்திரியைக் கோரும் பிரேரணையொன்று நல்லூர் அரசடி ஜனசக்தி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

உபதலைவர் திரு. பொ. முத்துலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நல்லூர் திருவிழா உற்சவகாலத்தில் சனசமூக நிலையத்தினர் கோவிலுக்கு வரும் அ[illegible]ர்களுக்கு ஆற்றும் தொண்டுகள் குறித்தும் பரிசீலனை செய்யப்பட்டது.

— —

## ஆண்டு விழா

கைதடி, புதன்

கைதடி செவிடர் குருடர் பாடசாலையின் பழைய மாணவர்களின் நான்காவது ஆண்டுவிழா இம்மாதம் 31-ம் திகதி கைதடி செவிடர் குருடர் பாடசாலையில் நடைபெறவுள்ளது. அன்று காலை மேற்படி கல்லூரியின் பழைய மாணவர்களுக்கும் புதிய மாணவர்களுக்குமிடையே கிரிகெட்போட்டி நடைபெறவுள்ளது. இதையடுத்து மதியபோஜனம் நடைபெறும். மாலையில் பொதுக்கூட்டம் நடைபெறும்.

— —

## குருபூசை

சரவணை, புதன்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை அடுத்தமாதம் ஒன்பதாம் திகதி சரவணை சைவ இளைஞர் மன்றத்தினரால் சரவணை ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோவிலில் கொண்டாடப்படவுள்ளது.


ஸ்ரீகாலிங்கன்

இணுவில்

தினசரி 6-30, 9-30 மணி

போயா, பிரிபோயா 2-30

ஜெய்சங்கர்- விஜயநிர்மலா நடித்த

## சிரித்த முகம்

REGAL JAFFNA

Daily 4 Shows

Kirk Douglas, Sylva Koscina

in

A LOVELY WAY TO DIE

(Panavision-color)


க. வேலுப்பிள்ளை

## கனிஷ்ட பல்கலைக்கழக விளையாட்டுப்போட்டி

பருத்தித்துறை, புதன்

பலாலி விசேட பயிற்சிக் கழக வருடாந்த இல்லங்களின் விளையாட்டுப் போட்டி இம்மாதம் 30-ம் திகதி கலாசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். வடமாநிலக் கல்வியதிபதி திரு. வெ. சங்கரலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார். திருமதி சங்கரலிங்கம் பரிசில்கள் வழங்குவார்.

மகாரகம ஆசிரியர் கல்லூரிக்கும் பலாலி ஆசிரியர் கல்லூரிக்குமிடையில் நடைபெறவிருக்கும் வருடாந்த விளையாட்டுப்போட்டி ஆகஸ்ட் 7-ம், 8-ம் திகதிகளில் மகாரகமையில் நடைபெறும்.

— —

## வழக்கறிஞர் - தொழிலாளி போட்டி

பருத்தித்துறை, புதன்

நெல்லியடிப் பட்டின சபைக்கான தேர்தலில் ஒரு வட்டாரத்தில் கார்ச்சாரதியான தொழிலாளி வழக்கறிஞர் ஒருவருடன் போட்டியிடுகிறார்.

— —

## சேவையை விஸ்தரிக்க சம்மதம்

டச்சிலைப்பள்ளி, புதன்

இவ்வளவு நாளும் ஆளியவளை கொடுக்களாய் ரேட்டு வரை நடைபெற்றுவந்த யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கிளிநொச்சி பஸ் சேவைகளை ஆளியவளை நாலாவது மைல்கல் வரை விஸ்தரிக்கும்படி பொதுமக்களும் தாழையடி பஸ் பிரயாணிகள் சங்கமும் இ.போ.ச. மேலதிகாரிகளை பலமுறை கேட்டுக் கொண்டதற்கிணங்க மேற்படி வீதியைக் கடந்த வியாழக்கிழமை பார்வையிட்ட இ.போ.ச. மேலதிகாரிகள் விரைவில் சேவையை விஸ்தரித்துத் தருவதற்குச் சம்மதம் தெரிவித்ததாக பிரயாணிகள் சங்கக் காரியதரிசி கூறினர்.


MANOHARA JAFFNA

Daily 4-45, 7-00 & 9-45 p.m.


Poya-Prepoya 10-30 a.m.

Graig Stevens

in

GUNN... Number One

(Strictly for adults)



# மேனி எழில் என்றென்றும் பேணிக் காக்கப்பட்டது

சகுந்தலை தன் மேனி வனப்பினைப் பெருக்கிப் பொலியச் செய்வதற்குச் சந்தனக் குழம்பும் குங்குமக் கலவையும் உபயோகித்து வந்தாள். ஆனால், உங்கள் மேனி வனப்பினைச் சீருறுத்தி மெருகூட்டத் தூய கலமைனும் வடித்த உவிச்ஹசெல் சத்தும் கொண்ட குறாக்ஸ் லக்ரோ-கலமைன் வைத்தியக் கலை வழங்கியுள்ள அதிசய அழகு சாதனப் பொருள். குறாக்ஸ் லக்ரோ-கலமைன் லோசனும் பவுடரும் சருமத்திலுள்ள மாசு மறுக்களை யெல்லாம் அகற்றி மேனி எழிலைப் பாதுகாக்க உதவுகின்றது. வேர்க்குரு, வெகிர், சருமத் தடிப்பு, முகப்பரு, சொறி, அழற்சி, வறட்டுச் சருமம் ஆகியவற்றையெல்லாம் குளுமை காட்டி மாற்றிவிடுகின்றது.




குறாக்ஸ் லக்ரோ-கலமைன் கொண்டு உங்கள் சருமத்திற்கு 20-ம் நூற்றுண்டு ஒப்பனை நலம் வழங்குங்கள்.

விநியோகஸ்தர்கள்:- ஜே. எல். மொறிசன், சன் அண்டு ஜோன்ஸ் (சிலோன்) லிமிற்றெட்


இன்று முதல்

# ராஜா ரேக்கீஸ் - யாழ்நகர்

தினசரி 3 காட்சிகள், பி. ப 2-30க்கும், 6-30க்கும், இரவு 10 மணிக்கும்,

போயா தினங்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 10-30க்கு மெட்னி.

சிரிப்பு! சிரிப்பு!! சிரிப்பு!!! மக்களை தன்னுடைய நகைச்சுவையால் ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்திப் பரவசப்படுத்திய கலையுலக வேந்தன் என். எஸ். கிருஷ்ணனின் மறக்க முடியாதகாவியம்.



★ என் எஸ். கிருஷ்ணன்

★ ரி. ஏ மதுரம்

★ ஜெமினி கணேசன்

★ டெய்ஷி ராணி

மற்றும் பலர்

# 67-ல்

# என். எஸ். கிருஷ்ணன்

(எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்)

பிலிம் (f) பெயர் பத்திரிகை டெல்லியில் நடாத்திய நட்சத்திரக் கலைவிழாவும் கலரில் காண்பிக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொமாண்டோ வானொலி பிரசாரத்துக்கு கெய்ரோவில் தடை

## சிரியா அதிபருடன் நாஸரின் தூதுவர் ஆலோசனை

கெய்ரோ. ஜூலை 29

கெய்ரோவில் இருந்து பாலஸ்தீனக் கொமாண்டோக்கள் ஒலிபரப்பி வந்த இரு வானொலிச் சேவைகளை ஐக்கிய அரபுக் குடியரசு தடைசெய்துள்ளது.

மேற்காசிய அமைதிக்கு அமெரிக்கா தெரிவித்த யோசனைகளையும், அவைகளை அதிபர் நாஸர் ஏற்றுக்கொண்டுள்ளதையும் பாலஸ்தீனக் கொமாண்டோக்கள் குறை கூறிக்கொண்டுவந்ததைத் தொடர்ந்து அவைகள் நிறுத்தப்பட்டுள்ளன

பாலஸ்தீன விடுதலை இயக்கமும், அல்பத்தா இயக்கமும் இந்த இரு வானொலிச் சேவைகளை நடத்திவந்தன. இவைகளைத் தடைசெய்ததின் மூலம் அதிபர் நாஸர் பாலஸ்தீனக் கொமாண்டோக்களுக்கு எதிராகத் தீவிர நடவடிக்கை எடுத்துள்ளாரென்று அவதானிகள் கருதுகின்றனர்.

பாலஸ்தீனக் கொமாண்டோக்களின் முக்கிய பிரசாரக் கருவிகளாக இந்த வானொலிச் சேவைகள் இருந்துவந்தன.

### நாஸரின் தூதுவர்

அமெரிக்க யோசனைகள் பற்றிச் சிரியாத் தலைவர்களுடன் ஆலோசிப்பதற்காக எகிப்திய அதிபர் நாஸர் அனுப்பிய தூதுவர் டமாஸ்கஸ்ஸில் சிரிய அதிபர் டாக்டர் அத்தாஸியைச் சந்தித்துப் பேசியிருக்கிறார். இந்தப் பேச்சுகள் மிகவும் வெற்றிகரமாக இருந்ததாக நாஸரின் தூதுவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க யோசனைகள் பற்றி இஸ்ரேலிய மந்திரிசபை இன்று மீண்டும் கூடி ஆலோசிக்க இருக்கின்றது. நேற்றைய கூட்டம் எதுவித முடிவுமின்றி ஒத்திவைக்கப்பட்டது.

## 'நாஸா' நிர்வாகி விலகினர்!

நியூயோர்க், ஜூலை 29

தேசிய வான்பயண வெளிவான் ஆராய்ச்சிக்கழகமான 'நாஸா' வின் நிர்வாகியாக இருந்துவந்த டாக்டர் தோமஸ் ஸ்பெயின் தமது பதவியை ராஜினுமா செய்துள்ளார்.

மனிதன்சந்திரனில் காலடி வைக்கும் சரித்திர முக்கியத்துவம்மிக்க நிகழ்ச்சியை டாக்டர் தோமஸ்ஸ்பெயின் முன்னின்று நிர்வகித்தவராவார்

டாக்டர் ஸ்பெயினின் ராஜினுமாவை அதிபர் நிக்ஸன் ஏற்றுக்கொண்டுள்ளார் திரு. நிக்ஸன் 'நாஸா' அதிபருக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் டாக்டர் ஸ்பெயின் விலகிச்செல்வது குறித்து பெரிதும் கவலை தெரிவித்துள்ளதுடன், அவரது சேவைகளுக்காகப் பெரிதும் பாராட்டியுள்ளார்.

டாக்டர் ஸ்பெயின் தனியார் துறையிலுள்ள அமெரிக்க மின்சார நிறுவனம் ஒன்றில் உயர்பதவியொன்றைப் பொறுப்பேற்கவிருக்கின்ருர்.

## பக்திக்கு ஒரு பத்திரிகை

சென்னை, ஜூலை 29

பக்தி விடயங்களை பிரசுரிபதற்கென 'மோகன' என்னும் பத்திரிகை தமிழ் நாட்டிலிருந்து வெளிவரவிருக்கிறது.

கவிதா ரத்னம் திருமதி ஹா. கி. வாலம் அம்மையார் இப் பத்திரிகையை வெளியிடுவார், தெய்வ பக்தி, தேசபக்தி, இலக்கிய பக்தி இவைகளையே கொள்கையாகக் கொண்டதாக இப்பத்திரிகை விடயங்களை வெளியிடும்.

## நாதஸ்வர கலைஞருக்கு தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், வியாழன்

ஈழத்து நாதஸ்வர வித்துவான் திரு. க. கணேசனுக்கு காரைநகர் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானம் தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கத் தீர்மானித்துள்ளது.

இலங்கையையும் இந்தியாவையும் சேர்ந்த சிறந்த அறிஞர்களிடம் நாதஸ்வரம் பயின்ற வித்துவான் திரு. கணேசன் தமக்கென ஒரு பாணியை அமைத்துக் கொண்டிருக்கிருர்.

## 'முற்போக்கு நாடுகள் ஆதரவு அளிக்கின்றன"

—திருமதி பின்

கோட்டை, புதன்

தென்வியட்நாமிய மக்களுடன் வியட்நாமிய மக்கள் புதிய தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள விரும்புகின்றனர். என்று தென் வியட்நாம் புரட்சி அரசின் வெளிநாட்டு அமைச்சர் திருமதி பின் கூறினுர்.

இவர் இன்று மாலை வீடமைப்பு அமைச்சர் திரு பீற்றக் கெனமனைச் சந்தித்துப் பேசினுர். பொறளையிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் அளிக்கப்பட்டவரவேற்பில் திருமதி பின் பேசுகையில் தென் வியட்னும் மக்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற் கெதிராக நடாத்திவரும் போராட்டத்திற்கு உலகிலுள்ள முற்போல்கு நாடுகள் ஆதரவு கொடு கின்றன இந்த முறையில் இலங்கை மக்களும் ஐக்கிய முன்னணி அரசாங்கமும் ஆதரவு தெரிவிப்பதுகண்டு மகிழ்ச்சி அடைவதாகக் கூறினுர்.

இவருக்கு இக்கூட்டத்தில் உலோகத்தாலான கேடயம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பேசிய கம்யூனிஸ்ட்கட்சிச் செயலாளரும் வீடமைப்பு அமைச்சருமான திருபீற்றக்கெனமன் பேசுகையில், இலங்கை மக்களினதும் ஐக்கியமுன்னணி அரசாங்கத்தினதும் ஆதரவு தென்வியட்நாம் மக்களுக்கு என்றும் உண்டு என்ருர்.

## "பாதுகாப்பு படகு வழங்குக"

பச்சிலைப்பள்ளி, புதன்

'பச்சிலைப்பள்ளிப் பகுதியிலிருந்து ஆழ்கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லும் வந்திர வள்ளங்களும் வெளியிணைப்பு யந்திர கட்டுமரங்களும் யந்திரக் கோளாறு ஏற்படும்போது மீன்பிடியாளர்கள் பெரிதும் கஷ்டமுறுகின்றனர். நீர், உணவின்றி எதிர்பாராதவிதமாக இவர்கள் பலநாட்கள் கடலிலேயே தங்கிவிடவும் நேரிடுகிறது. உடனே இவர்களைத் தேடிக் கண்டுபிடித்துக் கரைசேர்ப்பதற்கு பாதுகாப்புப் படகு ஒன்றை வழங்கவும்'' எனக் கோரும் மகஜர் ஒன்றை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கிளைக்கரை அபிவிருத்தி முன்னணி அனுப்பிவைத்துள்ளது. ......

## புதிய முகாம்கள்

அம்பன், புதன்

குடத்தனை கிராம சபையின் 3-வது வருடத்திற்கான புதிய உபதலைவர் தெரிவு குடத்தனைக் கிராமசபைத் தலைவர் திரு. வ. துரையப்பா தலைமையில் நடைபெற்றது. குடத்தனைக் கிராம சபையின் 10-ம் வட்டார உறுப்பினர் திரு. க. க. சிவசாமி புதிய உபதலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

0 0 0

அம்பன், புதன்

கள்ளக் கடத்தலையும், கள்ளக் குடியேற்றத்தையும் தடைசெய்யும் பொருட்டு குடாரப்பிலும், பொற்பத்தையிலும் இரு இராணுவக் கிளை முகாம்கள் நிறுவப்பட்டுள்ளன. இம் முகாம்களில் இராணுவத்தினர் நிரந்தரமாக இருப்பதுடன் வடகரையோரம் ரோந்து புரிந்தும் வருகின்றனர்.

## மகாத்மா கொலை பற்றிய விசாரணை

புதுடில்லி, ஜூலை 29

மகாத்மா கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக ஆராய்ந்த கமிஷனின் அறிக்கை இந்திய லோகசபையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

காந்திஜி சிலையொன்றை உடைப்பதற்கு முயன்ற மதன்லால் என்பவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தியபொழுது கிடைத்த துப்புகளைத் தொடர்ந்து இந்த விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டது. 1965-ம் ஆண்டு நியமிக்கப்பட்ட இந்தக் கமிஷனுக்கு முதலில் திரு ஜி. எஸ். பாதக் தலைமை வகித்தார். பின்னர் 1966-ல் முன்னுள் நீதிபதி ஜி. என். கபூர்

குற்றங்களைத்தடுப்பதில்

## பொலிசாருக்குதவும் பொதுமக்களுக்கு சான்றிதழ்கள்

கோட்டை, புதன்

குற்றத்தடுப்பு விஷயங்களில் பொலிஸாருக்குச் சிறிய முறையிலாவது துப்புக்கொடுத்து அல்லது வேறு வகையில் உதவும் பொதுமக்களுக்கு நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்குவது பற்றிப் பொலிஸ் மா அதிபர் ஆலோசித்து வருகிருர்.

எந்த வகையிலாவது பொலிஸ் நடவடிக்கைகளுக்கு ஆதரவு நல்கும் பொதுமக்களுக்கு நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்குவதின் மூலம் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான தொடர்புகளை மேலும் நெருக்கமாக்கிக்கொள்ள விரும்புவதாக மா அதிபர் தெரிவித்திருக்கிருர்.

தினந்தோறும் கடமைகளில் ஈடுபட்டிருக்கும் வேளைகளில் சிறிய அளவிலாவது உதவிபுரியும் பொதுமக்களின் பெயர்கள், முகவரிகளைப் பெற்று பொலிஸ் அதிபர்களுக்கு அறிவிக்கும்படி பொலிஸ் காவலர்கள் கேட்கப் பட்டிருக்கிருர்கள், இவ்வாறு உதவிபுரியும் பொதுமக்களுக்கு பொலிஸ் அதிபரின் கையெழுத்துடன் சான்றிதழ்கள் அனுப்பி வைக்கப்படும்.

## புகார்கள் மனு நிராகரிப்பு

நல்லூர், புதன்

அச்சுவேலிப்பிள்ளையார் கோயில் கதவுகளைத் திறந்துவிடும்படி கோரி கோயிற் பூசகர்களினுல் தாக்கல் செய்யப்பட்ட மனுவை யாழ். மாவட்ட நீதிபதி ஜனுப் எச். எஸ். இஸ்மாயில் நிராகரித்தார்.

இந்த மனுமீது நேற்று விசாரண நடைபெற்றபோது பிரதிவாதிகள் தங்கள் கையில் திறப்பை வைத்துக்கொண்டு தேவையான நேரத்தில் கோயில் கதவுகளைத் திறந்து விடுவதற்குத் தாங்கள் தயாராக இருப்பதாகத் தெரிவித்தனர்.

விசாரணை முடிவில் கோயில் பூசகர்களின் மனுவை நீதிபதி நிராகரித்தார்.

## 'மக்களுக்கு நேர்மையான பணிபுரிவேன்'

பூநகரி, புதன்

பல இனத்தவர்களும் பல மதத்தவர்களும் வாழுகின்ற இக்கிராமத்தில் எல்லோரும் ஒற்றுமையாக ஒன்றுசேர்ந்து இவ்வைபவத்தை நடத்துவதைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. என்னை உங்கள்சேவையாளனுகக் கொண்டீர்கள் உங்கக்கு சேவைகளை நேர்மையான முறையில் செய்வேன்.

இவ்வாறு நாச்சிக்குடா பள்ளி வாசல் முன்றலில் ஜனுப் மா. கச்சிமுகமது(கி. ச உறுப்பினர்) அவர் தலைமையில்நடைபெற்ற பாராட்டு விழாவில் கிளிநொச்சி எம். பி. திரு. வீ. ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் யாழ்ப்பாணத்திலுள்ள 200 முஸ்லீம் குடும்பங்களை பூநகரியைச்சேர்ந்த பள்ளிக்குடாவில் குடியேற்றுவதற்காக நடவடிக்கைகளில் எமது தலைவர் ஜீ ஜீ. அவர்கள் ஈடுபட்டு முயற்சிகள் எடுத்தார். அவர்விட்டபணியைத் தொடர்ந்து அக்குடியேற்றத்தை நிறுவிவைப்பேன், மற்றும் மீன்பிடித்துறைமுகம் அமைத்துத் தரும்படி கேட்டுள்ளீர்கள் இதுசம்பந்தப்பட்ட அமைச்சருடன் தொடர்பு கொண்டு துறைமுகம் நிறுவுவதற்கு முயற்சி எடுப்பேன்.

ஆலிஜினுப், அப்துல்காதர் ரகுமான் லெப்பை, ஜனுப் நூர் முகமது திரு. சிவசாமி, பூநகரி கி. ச தலைவர் வைவல்லிபுரம், பொ. தர்மலிங்கம் ஆகியோரும் பேசினர்.

## 'கண்ணகி' வில்லிசை

யாழ்ப்பாணம், புதன்

அப்புத்தளை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் ஆடி உற்சவத்தின் போது தமிழ்மணி திரு. எஸ். கணேசசுந்தரம், திரு. வேணுமகாதேவன் கோஷ்டியினரின் வில்லிசைப் பாட்டு நடைபெற்றது. இக் கோஷ்டியினர் 'கண்ணகி' வரலாறு பற்றி வில்லிசை நிகழ்த்தினர்.

## சிங்கள ஆசிரியர்கள் இடமாற்றம்

உடுப்பிட்டி, புதன்

கரவெட்டி ஸ்ரீ நாரத தமிழ்-பௌத்த பாடசாலையில் சிங்களம் போதிப்பதற்கென அரசினரால் அனுப்பி வைக்கப்பட்டிருந்த மூன்று சிங்கள ஆசிரியர்களில் இருவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

திரு. சந்திரசேன கடந்த மாதம் இடமாற்றம் செய்யப்பட்டார். திரு. இரத்தினபால பண்டாரராஹ சிங்கெதர, மாத்தளை டுல்லேவா மகாவித்தியாலயத் தமிழ்ப் பகுதிக்கு இம்மாத இறுதியிலிருந்து மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

தற்போது திரு. சமரசிங்கா மாத்திரமே எஞ்சியுள்ளார்.

## பரந்தனில் சு.கட்சிக்கிளை

விஸ்வமடு, புதன்

சுதந்திரக்கட்சி கிளிநொச்சி தொகுதி பரந்தன் கிளை பொதுநிர்வாக சபைக் கூட்டம்பதில் தலைவர் திரு க தம்பிநாயகம் தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சித் தொகுதியில் பஸ் போக்குவரத்துச் சீர்கேடுகள், பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை, அத்துமீறி அரசாங்க காணிகளில் குடியேறியவர்களின் நிலை, ஆகியவற்றிற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்களைச் சந்தித்து நடவடிக்கை எடுப்பதென்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. கீழ்க்காண்போர் நிர்வாக உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு க செல்லையா, உப தலைவர்கள்: திரு. க தம்பிநாயகம், திரு க. கணபதிப்பிள்ளை, செயலாளர்: திரு எஸ் ஐ ஜோர்ஜ், உப செயலாளர்: திரு வ. தர்மலிங்கம், பொருலாளர்: திரு வீ க ராசையா, உப பொருலாள: திரு அ சின்னத்துரை, நிர்வாகசபை உறுப்பினர்களாக திருவாளர்கள் ப இராமன், கே. கணபதிப் பிள்ளை, எம். கோபாலன், ஏ சின்னத்துரை, வீ க ராசையா, எஸ். ஐ ஜோர்ஜ், கே தம்பிநாயகம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

நீங்கள் வீடு கட்டும் பொழுது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் வீடு கட்டும் பொழுது

# ஒட்டுப் பலகைக் கதவுகளை பாவித்து

விலையை 40% குறைக்கவும்

விலை ரூபா 60/- தொடக்கம் ரூபா 156/- வரையாகும்.



☐ ஒட்டுப் பலகைக் கதவுகள் பாரம் குன்றந்தன்மை, நீண்ட காலம் பாவிக்கக் கூடியவை எழில் மிக்கவை. இலகுவில் பொருத்த கூடியவை. ... உற்பத்தி செய்யப்பட்டவை. கிரிகம்பலிகை, ... சாதாரண ரகங்களிலும் கிடைக்கும்.

☐ கதவுகள் பின் குறிப்பிட்ட அளவுகளில் விநியோகிக்கப்படும்:

உயரம் : 6' 9"
அகலம் : 2' 3", 2' 9", 3' 6"
கனம் : 1¼"

☐ கட்டத்திற்கு உபயோகிக்கப்படுகிற ... நீண்டகால உழைப்பிற்காக சிறந்த முறையில் பதப்படுத்தப்பட்டவையாகும்.

உற்பத்திக்கு உபயோகிக்கப்பட்ட பசை ஈரத் தன்மையை எதிர்க்கும் வன்மையுடையது.

**இக்கதவுகள் பாவனையாளருக்கு உடனடியாக விற்பனைக்கு கிடைக்கும்**

இலங்கை ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம்
இல: 18, பலாலி வீதிச சந்தி,
சூரியகுளம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 508.

இலங்கை ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம்
420, பௌத்தலோக மாவத்தை
கொழும்பு 7.
தொலைபேசி : 95846, 92908.

THUNDERFLASH


கப்பட்டது. 1965-ம் ஆண்டு நியமிக்கப்பட்ட இந்தக் கமிஷனுக்கு முதலில் திரு. ஜி. எஸ். பாத்தக் தலைமை வகித்தார். பின்னர் 1966-ல் முன்னாள் நீதிபதி ஜி. என். கபூர் விசாரணைகளைப் பொறுப்பேற்றார்.

மகாத்மா காந்தி கொலை செய்யப்படவிருந்தது பற்றி முன்கூட்டியே பூனாவிலுள்ள ஒருவருக்குத் தெரிந்திருந்ததென்றும் இவர் பம்பாய் முதலமைச்சருக்கு தகவல் கொடுத்து பின்னர் அது வல்லபாய் படேலுக்கும் தெரிவிக்கப்பட்டிருந்ததாக விசாரணைகளில் தெரியவந்திருப்பதாகக் கருதப்படுகிறது.

## இ.போ.ச தலைவரைச் சந்திப்பர்

உடுப்பிட்டி, புதன்

இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் நடாத்தப்பட்ட சபை ஊழியருக்கான பதவியுயர்வுப் பரீட்சையில் தேர்ச்சிபெற்ற ஊழியர்களுக்கு இதுவரை வேதன உயர்வு வழங்கப்படவில்லையாம்.

இப்பதவி உயர்வு சம்பந்தமான கடிதங்கள் இவர்களுக்குக் கடந்த மாதமே இ. போ. ச. பிரதம பொறியியல் அதிகாரியால் அனுப்பப்பட்டுவிட்டது. பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவில் பணிபுரியும் அநேக பதவியுயர்வுபெற்ற பொறியியல் பகுதி ஊழியர்கள் முன்புசெய்த வேலையையே செய்யுமாறு டிப்போவில் பணிக்கப்படுகின்றனராம்.

இப்பிரச்னை சம்பந்தமாகத் தொழிற்சங்கத் தலைவர்கள் விரைவில் இ. போ. ச தலைவரைச் சந்தித்துப் பேசுவார்களெனவும் இதே காலத்தில் மேற்படி பரீட்சையில் சித்தியெய்திய மற்றமாகாணங்களில் உள்ள டிப்போக்களில் வேலை செய்யும் ஊழியர்கள் சம்பள உயர்வும் தொழில் மாற்றமும் பெற்றுள்ளதாகவும் டிப்போ ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

— —

## உப தலைவர்

விஸ்வமடு, புதன்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பரந்தன் கிளைத்தலைவரும் சுதந்திரக்கட்சி கிளிநொச்சி தொகுதி கிளை அமைப்புச் செயலாளருமான திரு. க. தம்பிநாயகம் இலங்கைத் தமிழர்சோஷலிச முன்னணியின் உப தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.


ளில் இராணுவத்தினர் நிரந்தரமாக இருப்பதன் வடகரையோரம் ரோந்து புரிந்தும் வருகின்றனர்.

விசாரணை முடிவில் கோயில் பூசகர்களின் மனுவை நீதிபதி நிராகரித்தார்.

சுந்தரம், திரு. வேணுமகாதேவன் கோஷ்டியினரின் வில்லிசைப் பாட்டு நடைபெற்றது. இக்கோஷ்டியினர் 'கண்ணகி' வரலாறு

யப்பட்டனர்.

பற்றி வில்லிசை நிகழ்த்தினர்.

# பரிபூரண மனநிறைவு பெற அன்பு மொழி பல்கூறும். கோயா பேர்பியூமும், கொலோனும் பாவித்திடுக!

அன்பர் அருகிலிருக்கையில் ஆசை மொழிகூறல் கடினம். அனைவரும் குழுமியிருக்கையில் அன்பு மொழி பேசல் அதி கடினம்.

சம்பாஷிக்க முடியா இவ்வேளைகளில் இதயத்தின் விருப்பையும் உள்ளத்தின் உண்மை எண்ணத்தையும் எடுத்துரைப்பவை

கோயா பேர்பியூமும், கொலோனும்.

இதய கமலத்தின் முழுநிறைவுக்கும், நீடிய சுகந்தத்திற்கும். பாரிஸ், நியூயார்க், லண்டன் நகரங்களின் நவநாகரீக மாதர் உணர்ந்துள்ள இரகசியம் கோயா பேர்பியூங்களும் கொலோன்களுமே!

மனோகர சுகந்தமளிக்கும் பிளக் ரோஸ், என்டைஸ், கார்டீனியா, லவ் அப்பயர், கோயா நம்பர். 5, வைல்ட் சில்க், டைம்லஸ் ஆகிய ஏழ் வகையிலிருந்து தெரிந்தெடுங்கள்



இதய வீணையின் இன்இசை கூறுவன கோயா பேர்பியூமும் கொலோனும்.

GIANT

மனிவாக்கு

கற்கள் இல்லாத நல்லநிலத்தில் நடும் வித்து எளிதில் முளை கிளம்புவது போல கள்ளமற்ற உள்ளத்தைப் பெற்றால் இறைவன் மிக எளிதில் கிட்டுவான். —ராமகிருஷ்ணர்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆடி மாதம் 14-ந் திகதி (30-7-70)

## மக்கள் குழுக்கள்

மக்கள் குழுக்களின் அமைப்பு முறை, அவைகளின் கடமைகள் பற்றி மக்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு மக்கள் குழுக்கள் பற்றி பொதுநிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அமைச்சர் இன்னும் சில தினங்களுக்குள் வெள்ளை அறிக்கையொன்றை வெளியிடவிருக்கிறார். வெள்ளை அறிக்கையில் இடம்பெறவிருக்கும் மக்கள் குழுக்கள் சம்பந்தமான சில முக்கிய அம்சங்களை சில தினங்களுக்கு முன்னர் அமைச்சர் பத்திரிகை நிருபர்கள் மகாநாடொன்றில் எடுத்துக்கூறியிருந்தார். மக்கள் குழுக்கள் சம்பந்தமாக கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்ட போதே சிலர் பலவித சந்தேகங்களை கிளப்பினர். கூட்டணி மிகப் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியில் அமர்த்தப்பட்டதால் மக்கள் குழுக்கள் அமைப்பதற்கு அங்கீகாரமளிக்கப்பட்டுவிட்ட தென்றுகருதலாம் ஆனாலும் சந்தேகத்தையும் சர்ச்சையையும் கிளப்பியுள்ள முக்கியமான ஒரு விஷயத்தில் மக்களின் கருத்துக்களை அறிந்துகொள்ளவும் அவை பற்றி ஆராயவும் அவகாசமளிக்கப்பட வேண்டியதே முறை. இந்தவகையில் மக்கள் குழுக்கள் பற்றிய விபரம் கொண்ட வெள்ளை அறிக்கையை வெளியிடும் அரசாங்கத்தின் தீர்மானம் வரவேற்புக்குரியது.

மக்கள் குழுக்களில் அந்தந்தப் பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர்கள் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்களாக இருப்பார்களென்றும் ஒவ்வொரு குழுவிலும் 11 பேர் அங்கம் வகிப்பார்கள் என்றும் இந்த குழுக்கள் தீர்மானம் நிறைவேற்றி அந்தந்த அமைச்சுக்கு ஆலோசனை தெரிவிக்க முடியுமே யன்றி நேரடியாக எவருக்கும் கட்டளை பிறப்பிக்க முடியாதென்றும் அமைச்சர், நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்திருந்தார்.

அமைச்சர் தெரிவித்த அம்சங்களிலிருந்தும் அவர் கொடுத்த விளக்கத்திலிருந்தும் மக்கள் குழுக்களால் பயன் கிடைக்குமென்று நம்பக் கூடியதாயிருக்கிறது.

மக்கள் குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிக்கும் போது கட்சி அரசியலில் தீவிர ஈடுபாடுள்ளவர்களை விடுத்து எந்தக் கட்சியிலும் இல்லாத நேர்மையும் மக்கள் சேவை மனப்பான்மையும் முள்ளவர்களையே நியமிப்பது மக்கள் குழு தனிப்பட்டவர்களின் சுதந்திரத்துக்கு மதிப்பளித்து நடந்து கொள்ள வழி வகுப்பதும், மக்கள் குழுக்கள் மீது மக்கள் நம்பிக்கை வைத்து, ஒத்துழைப்பும் உதவியும் அளிக்க உதவும்.

## நிக்ஸனின் 'ஆசியா கொள்கை'

ஆசியர்கள் ஆசியர்களை எதிர்த்துப் போர் புரியும்படி செய்வதே அமெரிக்க ஜனாதிபதியான நிக்ஸனின் 'புதிய ஆசியாக் கொள்கை' என்று இலங்கை வந்துள்ள தெற்கு வியட்னாம் புரட்சி அரசாங்கத்தின் அமைச்சர் திருமதி தைபின் கொமும் பிலே பத்திரிகை மகாநாட்டில் பேசுகையில் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டினார். இந்தக் குற்றச்சாட்டில் உண்மை ஏதும்

பெறவேண்டும். தங்களுக்குள் ஒரு சமரசம் செய்துகொள்ள எல்லா முயற்சிகளையும் அவை செய்யுமாயின், பிரிந்தவை ஒன்றுபட்டு ஒத்துழைக்கமுடியாதா?

ஆனல் பிரிந்த நாடுகளில் அந்நியத் துருப்புகள் இருக்குமாயின், இரு பகுதிகளுக்கும் ஒற்றுமை ஏற்படமுடியாதபடி அவை ஒரு பெரிய தடையாக இருக்கும். உதாரணமாக வியட்னாமிலே

# ஆடி அமாவாசை

**க. ஏரம்பமூர்த்தி**

பௌர்ணமித் திதியில் அன்னையை நினைந்தும் அமாவாசைத் திதியில் பிதாவை நினைந்தும் விரதம் அனுட்டிக்கும் சைவர்கள் பலர். இவ்விரதங்களின் காரணத்தையும் மகிமையையும் அறியாத காரணத்தினால் பௌர்ணமி அமாவாசைத் திதிகளில் விரதம் அனுட்டிப்போர் தொகை குறைந்து கொண்டே வருகிறது. எம்மைப் பெற்றுவளர்த்த அன்னை தந்தையரை நினைந்து வழிபாடாற்றும் விரதங்களை நாம் கைவிடுவதால் எமது அன்னை தந்தையரைப் போற்றாது விடுவதேயாகும்.

மாதந்தோறும் பௌர்ணமி அமாவாசை விரதங்களை அனுஷ்டிக்க முடியாதவர்கள் சித்திரைப் பௌர்ணமி ஆடி அமாவாசை முதலிய இரு நாட்களிலுமாகுதல் விரதம் அனுட்டித்தல் வேண்டும் ஆடி அமாவாசை சைவர்களுக்குமட்டுமல்ல வைணவர்களுக்கும் ஓர் முக்கிய தினம் இத்தினம் பிதுர் வழிபாட்டைக்குறிக்கும் ஓர் சிரார்த்த தினம்.

ஒரு இராசியில் சூரியன் சந்திரன் இருவரும் சேர்ந்து உறவாகும்நாள் அமவாசை சூரியனும் சந்திரனும் ஒரே பாகையில் பூமிக்கு நேராக வரும் நாள் அமாவாசை. சூரியன் ஞானகாரகன், ஆத்மகாரகன். அவனால் தான் பிராணிகளின் ஆத்ம அமைப்பு நிகழ்கின்றது. சூரியனாலேயே ஆண்மை ஆற்றல், வீரம், தீரம் முதலியவை தோற்றுகின்றன. சந்திரனால் எமக்கு மகிழ்ச்சி தெளிந்த அறிவு உற்சாகம் இன்பம் முதலியவை கிடைக்கின்றன ஆகவே சூரியனும் சந்திரனும் ஒரு இராசியிற் சஞ்சரிக்கும் அமாவாசைநாள் புனிதமானநாள் இயற்கைமூலம் இறைவனை எமக்குக் காட்டும் சைவம் இறந்த நாளைப் புனிதநாள் எனவும் இந்த நாளில் விரதம் அனுஷ்டித்து வழிபாடாற்றல் வேண்டுமென வகுத்ததில் அநேக தத்துவக்கருத்துக்கள் அடங்கியுள்ளன கோள்களின் சுழற்சிகள் எம்மைத் தாக்குகின்றன அந்நாட்களில் விரதம் அனுட்டிப்பதால் நாம்திடதேகிகளாய் வாழலாம் அதனால் இன்பமடையலாம் எனப் போதிக்கும் சைவ தத்துவத்தின் பெருமையை மறுக்கமுடியாது. அமாவாசை பௌர்ணமித் திதிகளில் மனித உடலின் நிலை மாற்றமடைகின்றது என்பதைக் கீழ் நாட்டு வைத்திய சாஸ்திரம் மட்டுமல்லமேல் நாட்டு வைத்திய சாஸ்திரங்களும் ஒத்துக் கொள்ளுகின்றன. இவ்வுண்மையை அறிவதற்குச் சாஸ்திரங்களை நாம் நாடவேண்டியதில்லை. நாம் கண்முன் காணும் சில நோயாளர்கள் மூலமும்நாம் அறிகின்றோம். ஆகவே அந்த நாட்களில் விரதம் அனுட்டிக்கும்படி போதிக்கும் சைவத்தின் பெருமை தானென்னே!

உயிர்கள் நற்பதவி அடையச் செய்வதற்குச் சிரார்த்தம் வெகு முக்கியம் எனவும் கூறியுள்ளனர் தத்துவங்களை ஆராய்ந்த சைவப் பெரியார்கள். தத்துவங்களை ஆராயாத விஞ்ஞான உலகம் சிரார்த்தம் எவ்வாறு உயிர்களை நற்பதவிக்கு இட்டுச் செல்லலாம் என விவாதிக்கலாம். ஆனல் சிரார்த்தம் என ஒன்று இருப்பதால் எம்மைப் பத்துமாதம் சுமந்து பெற்றுப் பையலென்ற போதே பரிந்தெடுத்த அன்னையையும் வையத்து நாம் வாழ வழிகாட்டிய பிதாவையும் நாம் மாதத்தில் ஒருமுறை, தவறின் வருடத்தில் ஒருமுறை நினைந்து அவர்களுக்காக வழிபாடாற்ற சிரார்த்த தினம் அமைக்கப்பட்டுள்ளது என்பதை மறுக்க முடியாது.

கடல்நீர் நமது பாவத்தைக் கழுவும் பரிசுத்த நீரெனவும், இறைவனது அருள் நீரெனவும் போற்றும் சைவப் பெரியார்கள் காலஞ்சென்ற எமது அன்னை தந்தையர்களை நினைந்து அமவாசை பௌர்ணமித் திதிகளில் கடல் நீராடி விரதம் அனுட்டித்து பிதுரர்களுக்கு முத்திகிடைக்க வேண்டுதல் செய்தல் வேண்டுமெனப் போதித்துள்ளனர். கடல்நீராடி விரதம் அனுட்டித்து பிதுரர்களுக்கு முத்திகிடைக்க வேண்டுதல் செய்தல் வேண்டுமெனப் போதித்துள்ளனர். கடல்நீர் உடல நலம் வளர்க்கும்நீர். அமாவாசை பௌர்ணமித் திதிகளில் கடலின் நிலையும் நமது உடலின் நிலையும் மாற்றம் அடைகின்றது என்பது நாம் கண்காணும் உண்மை. கடல் நீரில் நீராடுவதால் அநேக உள்ரோகங்களும், புற ரோகங்களும் குணப்படுகின்றன என்பதும் நாம் கண்காணும் உண்மை. கடல் நீரில் நீராடுவதால் ஆரோக்கியமும் உற்சாகமும் உண்டாகின்றது. மனப் பரிசுத்தமும், மன ஒருமைப்பாடும் உண்டாகின்றது. இறை வழிபாட்டிற்கு மன ஒருமைப் பாடும் மனப் பரிசுத்தமும் மிக முக்கியம் என்பதை இறை வழிபாட்டில் ஈடுபட்டவர்கள் நன்கு அறிவர். சர்க்கரையைச் சாப்பிட்டவன் மட்டுமே அது இனிப்பா புளிப்பா என்பதை அறிவான் சர்க்கரை புளிப்பா இனிப்பா என்பதை அறியச் சர்க்கரை சாப்பிடல் வேண்டும் அதே போல் இறை இன்பத்தை அனுபவிக்க இறை வழிபாட்டில் ஈடுபடல் வேண்டும்.

சூரியனும் சந்திரனும் பூமிக்கு நேரே நேர்படும் சமயம் அமாவாசை. இது மாதந்தோறும் நிகழ்கின்றது. வடக்கு நோக்கிச் சஞ்சரிக்கும் சூரியன் தெற்கு நோக்கிச் சஞ்சரிக்கும் ஆரம்ப காலம் ஆடி மாதம். பிறப்பை நாம் கொண்டாடுவதும் இதனாலேயே ஆகவே ஆடி அமாவாசை ஏனைய அமாவாசைகளை விடச் சிறப்புடையதாகின்றது.

இப் புண்ணிய திதியாகிய ஆடி அமாவாசைத் திதியிற் புண்ணிய தீர்த்தங்களில் நீராடி விரதம் அனுட்டித்தல் சிறந்தது. கடல் நீரில் மகத்துவம் வாய்ந்த இடங்களை நம் முன்னோர் ஆராய்ந்தனர். அவ்விடங்களில் மூர்த்தி தலம் தீர்த்தம் அமைந்தது. அங்கு நீராடி வாழ்வு பெற்றனர். முனிவர்களும், பேரரசர்களும் நீராடி வினை தீர்த்த தீர்த்தம் இலங்கையின் வடகரையில் உள்ளது. பண்டைக் காலத்திற் கண்டகி தீர்த்தம் என அழைக்கப்பட்டது. இதுவே கீரிமலையாகும். மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய் அமைந்த இடம் கீரிமலை.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

**1-8-70-ல் ஆடி அமாவாசை தினம்.**

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

இப்புண்ணிய திதியிலே இப்புண்ணிய தீர்த்தக் கரையிலே நகுல முனிக்கு அருள் பாலித்த நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரப் பெருமானும், 'நந்திப் பூமாலை நரபதியும் பாண்டவரும் பந்திப்படை பொருதல் பாரதத்தை முந்தியே சற்றிருக்கும் செங்கமலச் செங்கையிற்றன் வெண்கோட்டாற் பாற்றிருக்கும் செம்பொன் வரைப்பால் வரைந்தோன் வீற்றிருக்கும் அண்டர் முதன் முனிவரம் புவியோரன்புடனே கண்டவர்கள் போற்றும் கசாத்துறை'' என வரதராஜ பண்டிதர் புகழும் கயாத்துறையில் இறங்கிய மாருதப் பிரவாகவல்லி என்னும் குமரியின் கொடிய நோய் தீர்த்த குமரனும் காங்கேயப் பெருமானும் அடியார்களுக்குக் காட்சி தருவது வழக்கம்.

## இலங்கை..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ரேல் விவசாய நிபுணர்கள் உடனடியாக திருப்பி அழைக்கப்படுவர் என்றும் இஸ்ரேல் அப்பொழுதும் சமாதானத்தையே விரும்புவதாகவும் அதையே தொடர்ந்து கடைப்பிடிக்கு

# 'ஆசிய மக்களுக்கெதிராக ஆசிய மக்களை மோதவிடுவதே நோக்கம்'

## 'நிக்ஸன்கொள்கை பற்றி பின்அம்மையார்

கோட்டை, புதன் ... மக்களின் தலையாயகத்தையும் நீக்கிவிடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயராஜன் எழுதுவது..

''துணைவன்'' படத்தைப் பார்த்தீர்களா? அவசியம் பாருங்கள், என்று பல அன்பர்கள் கூறவே, வெலிங்டனில் அப்படத்தைச் சென்று பார்த்தேன். கோவில் திருவிழாவுக்கு வருவதுபோல் குடும்பம் குடும்பமாகப் பலரும் வருகின்றனர். சில வாரங்களாகியும் கூட்டம் மண்டபம் தாங்கவில்லை.

குஸ்திச் சண்டைகள் ஆபாச நடனங்கள் முதலியன இல்லாததால் இதைப் பார்க்க அவ்வளவு கூட்டமில்லை என்று சில நாட்களுக்கு முன் ஓர் அன்பர் கூறியது எவ்வளவு தவறு என்பதை நேரில் அறிந்து பட மாளிகை நிர்வாகியிடம் இது பற்றிக் கேட்டேன். குஸ்தி இல்லாவிடினும் பக்தி இருக்கிறதென்று கூறினார் அவர். பக்தியை வளர்க்கும் இவ்வித படங்களுக்கு பொதுமக்களின் ஆதரவு அதிகமிருப்பது மகிழ்ச்சியும் நம்பிக்கையும் அளிக்கின்றது

தமிழ்நாட்டிலிருந்து வரும் படங்களெல்லாம் ஆபாசமானவை யென்று ஒரு சிலர் பிரசாரம் செய்கின்றனர். அவர்கள் இப்படத்தைச் சென்று பார்ப்பின் இதைச் சிங்களத்திலும் ''டப்'' செய்துகாட்டவேண்டுமென்றும் கூறக்கூடும் முருக பக்தி அதிகமுள்ள சிங்களப் பொதுமக்கள் இப்படத்தை பார்க்க அதிகம் விரும்பின் அதில் வியப்பில்லை.

0 0 0

தமிழகத்திலுள்ள ஆறுபடை வீடுகளையும் வேறுபல கோவில்களையும் பார்க்க வேண்டுமா? பாஸ்போட், விஸா, எக்ஸ்சேஞ்ச் முதலிய கரைச்சல் இல்லாமல் சுலபமாக இப்படத்தின் மூலம் தரிசிக்கலாம். பழனி. திருச்செந்தூர் முதலிய பல கோவில்களையும் படம் பிடித்துக் காட்டுவதால், அவற்றைப் பார்க்கவே பலரும் ஆவலுடன் செல்லுகின்றனர்.

தமிழகத்தில்பாடல்பெற்ற ஸ்தலங்களிலுள்ள கலைக் கோயில்கள்பல உண்டு அவற்றை வர்ணப் படங்களாக இந்திய அரசாங்க தகவல் இலாகாவோ அல்லது படாதிபதிகளோ பிடிக்க முடியாதா? ஸ்தல புராணக் கதைகளையும் மக்கள் மனதில் பதியும் வகையில் படமாக்குவதாயின். அது பல வகைகளிலும் பயன் தருவதாக இருக்கும்.

சில நாட்களுக்கு முன் யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் ஒருசமயக்கருத்தரங்கு நடைபெற்றதாம் பல வாலிபர்கள் கலந்துகொண்டு கடவுளே கிடையாதென்றும் விதண்டாவாதம் பேசியதாக ஓர் அன்பர் வருத்தத்துடன் தெரிவித்தார். கடவுள் இல்லையென்று கூறுபவர்களும் இப்படத்தைப் பார்க்கவேண்டும். கடவுள் உண்டு என்று ஒப்புக்கொள்ளாவிட்டாலும், அவர்களை இதுபற்றி நன்கு சிந்திக்கவும் புனராலோசனை செய்யவும் இது நிச்சயம் தூண்டும்.

பத்து காசுக்கு கற்பூரம் கொளுத்தியவருக்கு பத்தாயிரம் ரூபாய் கிடைத்தது. ஆகவே தான் பத்தாயிரம் ரூபாய்க்கு கற்பூரம் கொளுத்துவதாக ஒரு போலி 'பக்தை' 'தப்புக்கணக்குப் போட்டு' பட்ட அவதிகள் பலரையும் சிரிக்க வைப்பதுடன் சீர்திருத்தவும் உதவ வேண்டும்.

0 0 0

நோயுள்ள ஒரு குழந்தையைத் தங்களால் குணப்படுத்த முடியாதென்றும், இனி நாட்டுவைத்தியமோ, அல்லது தெய்வமோதான் காப்பாற்றலாமென்றும் மேலைநாட்டு டாக்டர் கூறிகைவிட்டபின் தெய்வ அருளால் அக்குழந்தை பிழைப்பதாகக் கதை. திருமுருக கிருபானந்தவாரியாரின் ஆணித்தரமான பேச்சும், கே. பி. சுந்தராம்பாளின் பக்திமயமான இனியபாடல்களும் இப்படத்தின் சிறப்பு அம்சங்களில் சில. இதற்குள் மூன்று நான்கு முறை அப்படத்தைப் பல அன்பர்கள் பார்த்துள்ளனராம். எனக்கும் இதை மீண்டும் பார்க்க ஆவலாகவுள்ளது.

நடப்பதெல்லாம் நன்மைக்கே என்பதையும் நமக்கு அப்பாற்பட்ட கருணையுள்ள ஒரு சக்தி உள்ளதென்ற நம்பிக்கையையும் இப்படம் பலப்படுத்துவதாக உள்ளது.

0 0 0

உன்னையொழிய ஒருவரையும் நம்புகிலேன், பின்னை ஒருவரையான் பின் செல்லேன், பன்னிருகைக் கோலப்பா, வானோர் கொடிய வினை தீர்த்தருளும் வேலப்பா செந்தி வாழ்வே.

வியட்னும் புரட்சி அர சாங்கத்தின் அமைச்சர் திருமதி தைபின் கொழும் பிலே பத்திரிகை மகா நாட்டில் பேசுகையில் பகி ரங்கமாகக் குற்றஞ்சாட் டினர். இந்தக் குற்றச் சாட்டில் உண்மை ஏதும் உண்டா? ஆசியா மக்கள் தங்களுக்குள் தற்கொலைப் போர் புரிந்துகொள்ளு மாறு செய்வதே அமெ ரிக்காவின் புதிய கொள் கையாயின், அது ஆசியா வுக்கு மட்டுமன்றி அமெ ரிக்கா உள்ளிட்டு முடி வில் உலகுக்கே பெரும் தீங்காகும்.

இந்தியா, இலங்கை உள்ளிட்டு ஆசிய நாடுகள் பலவும் பல நூற்றுண்டு களுக்குப் பின், அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடு தலை பெற்றன. அரசியல் சுதந்திரம் பெற்றுங்கூட, அவற்றில் பலவும் பொருளாதார முன்னேற் றம் அடையமுடியாத துடன் அமைதியுமின்றித் தவிக்கின்றன. பல நாடு கள் இரண்டாகப் பிரி வினையாகி முட்டிமோதிக் கொள்ளுகின்றன. இதற் குப் பிறர்மீது குற்றம் சுமத்துவதைவிட, அந் தந்த நாடுகளே பொறுப்

ஆனல் பிரிந்த நாடு களில் அந்நியத் துருப்பு கள் இருக்குமாயின், இரு பகுதிகளுக்கும் ஒற்றுமை ஏற்படமுடியாதபடி அவை ஒரு பெரிய தடை யாக இருக்கும். உதா ரணமாக வியட்னமிலே பல லட்சம் அமெரிக்கத் துருப்புகள் இருந்துவரு கின்றன. தெற்கிலுள்ள வியட்னும் குடியரசின் கட்சியில் அமெரிக்கத் துருப்புகள் சேர்ந்து போரை நடத்திவருவ தால் இந்தப் போர் ஒரு முடிவுக்கு வரமுடியாம லும், இரு வியட்னும் களும் ஒன்றுபடமுடியாம லும் உள்ளன. அமெரிக் கத் துருப்புகள் அங்கு இருந்து விலகினல், யுத் தம் முடியவும், வியட் னும் பொதுமக்கள் விரும் பும் சமாதானமும், ஒற் றுமையும் ஏற்படவும் வழிபிறக்கும்.

இந்நிலைமை பற்றி அமெ ரிக்க ஜனதிபதி மீண்டும் புனராலோசனை செய்து, தமது ஆசியக் கொள்கை யைக் கூடிய சீக்கிரத்தில் மாற்றிக் கொள்ளவேண் டிய அவசியம் அதிகரித் துள்ளது.

# நெடிய காட்டுக்கு புதிய மகாவித்தியாலயம்

பருத்தித்துறை, புதன்

வல்வெட்டித்துறைப் பாட சாலைகளில் நிலவும் இட நெருக்கடியைச் சமாளிக்க ரூபா 25,000 அரசாங்க மான்யத்தில் நெடிய காட் டில் ஒரு புதிய மகாவித்தி யாலயத்திற்கான கட்டட வேலைகள் ஆரம்பித்துள் ளன. இப்புதிய மகாவித்தி யாலயத்திற்கென ஊர்ப்பிர முகர்கள் தமது சொந்தச் செலவில் ஐந்து வகுப்பறை கள் கட்டிக்கொடுக்கமுன் வந்துள்ளனர். பருத்தித் துறை ஆட்சிமன்ற உறுப் பினர் திரு. துரைரத்தினம் இதற்கான முயற்சியில் ஈடு பட்டார்.

.........

## கரபந்தாட்டப் போட்டி

பருத்தித்துறை, புதன்

பலாலி அரசினர் ஆசிரி யர் பயிற்சிக் கல்லூரி இல் லங்களுக்கான கரபந்தாட் டப் போட்டியில் இராம நாதன் இல்லம் வெற்றியீட் டியது. பொன்னையா இல்ல மும், இரத்தினம் இல்லமும் முறையே இரண்டாம், மூன் றும் இடங்களைப் பெற்றன.

வன்னி

## சிறுபான்மைத் தமிழர் முற்போக்கு இயக்கம்

முல்லைத்தீவு, புதன்

வவுனியா- முல்லைத்தீவு பகுதியில் வாழும் சிறுபான் மைத் தமிழர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் முல்லைத் தீவுப் பட்டின சபை சன சமூக மண்டபத் தில் கூடி 'வன்னி சிறுபான் மைத் தமிழர் முற்போக்கு இயக்கம்' என்ற பெயரில் ஓர் இயக்கத்தைச் ஸ்தாபித் துள்ளன.

இந்த இயக்கத்தின் நட ப்பு வருட உத்தியோகத்தர் களாகக் கீழ்க்காணுவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- திரு: சென் ஜோன்ஸ் வாஷிங்டன், உப தலைவர்: திரு எஸ். செல்வநா யகம், பொதுக் காரியதரிசி: திரு கே. கிருஷ்ணன், இணைக் காரியதரிசிகள்: திரு சூ சிங்கராஜர், திரு எஸ். அலேசு, திரு தாவீது, தனதி காரி திரு ஜே. எவ். சேவியர் ஒன்பது பேர் கொண்ட நிர் வாக சபையும் தெரிவுசெய் யப்பட்டது.

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலு ள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜூலை மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

# 'மக்களை மோதவிடுவதே நோக்கம்'

## 'நிக்ஸன்கொள்கை' பற்றி பின் அம்மையார்

கோட்டை, புதன்

''வடவியட்னும் மக்களும் தென்வியட்னும் மக்களும் ஒரே குடும்பத்தைச் சேந்த வர்கள். அத்தகையோரை ஒற்றுமையாக வாழவிடாது அவர்களின் தேசிய ஒரு மைப்பாட்டைக் குலைக்க அமெரிக்கா கங்கணங்கட் டிக்கொண்டு நிற்கிறது. ஆசிய மக்களை ஆசிய மக் களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யத் தூண்டிவிடுவதே ஜனதிபதி நிக்சனின் அரசி யல் தத்துவமாகவிருக்கிறது'

தென்வியட்னும் புரட்சி அரசாங்கத்தின் வெளி நாட்டுஅமைச்சர் நூலெயன் திபின் அம்மையார் நேற்று முன்தினம் அலரிமாளிகை யில் நடைபெற்ற பத்தி ரிகை நிருபர்கள் மகாநாட் டில் பேசுகையில் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தொடர் ந்து பேசுகையில் கூறியதா வது:

வியட்னும் போருக்கு அமெரிக்கா உண்மையில் தீர்வு காண விரும்பினல் வியட்னுமிலுள்ள தமது படைகளை முதல் வாபஸ் பெறவேண்டும் அத்துடன் தென்வியட்னுமிய அரசாங் கத்தையும் நிராகரிக்க வேண்டும்.

எங்களது புரட்சி அரசாங் கம் வியட்னுமில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஏற்படுத்தப்பட்டது. இந்த அரசாங்கத்தினல் வியட்னும் வரலாற்றில் ஒரு புதிய திருப்பம் உருவாகி வரு கிறது. அமெரிக்கா வியட் னுமை ஆக்கிரமிக்கிறது. அது தமது கொலனி ஆட் சிக் கொள்கையை இன்னும் விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டு அம்முறையை தீவிரமாக எங்கள் நாட்டில் நடாத்தி வருகிறது அமெ ரிக்கர்களின் இத்தகைய முறைமையால் கடந்த பதி ஞெரு ஆண்டுகளாக வியட் னும் சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் பின் தங்கிய நிலையிலுள்ளது.

அமெரிக்கர்கள் நவீன யந்திரங்கள் பலவற்றை வைத்திருக்கிறார்கள் எங்கள் நாட்டில்தங்களது 5 லட்சம் படையை நிறுவியுள்ளனர். ஆனல் எங்களது விடுதலைப் போருக்கெதிராக அவர்கள் வெற்றியடையமுடியவில்லை ஆதலால் தான் பாரிஸ் சமா தான பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை யேற்பட் டுள்ளது.

தங்களது தாய்நாட்டை அன்னியர் ஆக்கிரமிப்பிலி ருந்து விடுவித்து சுதந்திர மடையச் செய்வது வியட் னும் மக்களின் தலையாய கடமையாகும். வியட்ன மில் அமைதியேற்பட வேண் டுமானல் அமெரிக்கா வியட் னும் மக்களின் அடிப்படை யுரிமைகளென ஜெனீவா உடன்படிக்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்டனவாகிய சுதந்திரம், பிரதேச ஒரு மைப்பாடு முதலியவற்றை மதிக்கவேண்டும். அத்து மீறிய அமெரிக்க குடியேற் றத்தை தடைசெய்யவேண் டும். வியட்னும் ஜனநாய கக் குடியரசு உருவாக வேண்டும் எனத் தெரிவித்த பின் அம்மையார் அமெரிக் கா போர் நிறுத்தத்துக்கு உடன்பட்டால் நீங்கள் தியு அரசாங்கத்துடன் ஒத் துழைப்பீர்களா எனக் கேட்டகேள்விக்குப் பதில ளிக்கையில் அமெரிக்கா உண்மையில் போர் நிறுத் தத்தைவிரும்பி தனது கொடூரமான கொள்கை களுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்குமானல் படைகளை மட்டும் வாபஸ் பெறுவது மட்டுமன்றி தங்கள் கொள் கைகளை செயல் படுத்தும் ஒருகருவியாக சைகோனில் உருவாக்கிய தியூ அரசாங் கத்தையும் நீக்கிவிடும் எனத் தெரிவித்தார்.

மேலும் அவர் திருமதி பண்டாரநாயக்காவோடு ஆசியாவில் அமைதியை நிலைநாட்டுவது பற்றி பேச் சுவார்த்தை நடாத்தியது பற்றிக் குறிப்பிடுகையில்:- நாங்கள் இருவரும் குறிப் பாக இந்தோசீனவில் அமை தியைப் பாதுகாப்பது குறித்தே பேசினேம். நான் இந்தோசீனவில் அமை தியை ஏற்படுத்துவதற்காக எங்கள் 10 அம்சத்திட்ட த்தை அவருக்கு விரிவாக எடுத்துக் கூறினேன். இந்த 10 அம்சஅடிப்படையில் வியட்னுமில் மட்டுமன்றி ஆசியாவிலும் உலகம் முழுவ திலும் கூட அமைதியை நிலைநாட்டலாம் என கி குறிப்பிட்டதோடு அநேக சோஷலிசநாடுகளும் மற்றும் ஆசியா ஆபிரிக்காவிலுள்ள நாடுகளும் நாங்கள்எங்களது விடுதலைப் போராட்டத்தில் வெற்றியடைய வேண்டு மென சகல விதமான உதவிகளையும் செய்துள் ளன எனவும் குறிப்பிட் டுள்ளார்.

# வடபகுதி சுதந்திரக் கட்சிக்கிளைகள் மாநாடு

யாழ்ப்பாணம், வியா.

மக்கள் அரசாங்கத்திற்கு தமிழ்மக்கள் முழு ஆதரவை யும் காட்டினல்தான், அர சாங்கம் அவர்களின் பிரச் னைகளை சீக்கிரம் தீர்த்து வைக்கும். தமிழர்களின் பிரச்னைகளை தீர்த்துவைக்க வேண்டுமென்பதுதான் பிர தமரின் விருப்பம் அதனல் தான் முறைக்குமுறை வட பகுதிக்கு எங்களை அனுப்பி வைக்கின்றர்

நல்லூரில் நடந்த வட பகுதி சுதந்திரக் கட்சி கிளை களின் மகாநாட்டில் கலாச் சார உதவி மந்திரி திரு. சோமவீர சந்திரசிறி பேசும் போது மேற்கண்டவாறு கூறினர்.

உதவி அமைச்சர் கூட்டிய இம் மகாநாட்டில் வடபகுதி யில் நிறுவப்பட்ட 20 சுதந் திரக் கட்சி கிளை உறுப்பினர் கள் கலந்து கொண்டனர்:

உதவி மந்திரி மேலும்கூறி யதாவது: இருமாத காலத் த்தில் இங்கு 20 கிளைகள் நிறுவப்பட்டுள்ளது. இவ் வருட இறுதிக்குள் கிராமங் கள் தோறும் கிளைகள் நிறு வப்பட்டுவிடும் என எதிர் பார்க்கிறேன் சுதந்திர கட் சியினல் தான், தமிழர்களின் பிரச்னைகளுககு முடிவுகாண லாம் என்பதை தமிழ் மக் கள் உணர்ந்து விட்டார்கள் இங்குள்ள வாலிபர்களின் வேலையில்லாத் திண்டாட் டத்தை தீர்ப்பதற்கு கூடிய விரைவில் முயற்சி எடுப் போம்.

யாழ் மாநகரசபை உறுப் பினர் திரு அல்பிரட்துரை யப்பாபேசும் போது, ஒரே வட்டாரத்தில் பல கிளைகள் இருப்பதினல் பிரச்னைகள் தோன்றுமென்றும் ஒரே கிளையை நிறுவ முயற்சி எடுக்க வேண்டுமென்றும் கூறினர்.

யாழ். மாவட்ட சுதந்திரக் கட்சி அமைப்பாளர் திரு. எம். நடராசாபேசும்போது வடபகுதியிலுள்ள ஒவ் வொரு கிளையிலும் 50 க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் இருக்கிருர்களென்றும் ஒவ் வொருகிளையிலும்குறைந்தது 30 உறுப்பினர்கள் இருக்க வேண்டியது அவசியமென் றும் கூறினர்: இங்கு நிறு வப்படும் ஒவ்வொரு கிளைக ளும் தலைமைக்காரியாலயத் தில் பதிவுசெய்யப்படுமென் றும் தெரிவித்தார்.

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ரேல் விவசாய நிபுணர்கள் உடனடியாக திருப்பி அழைக்கப்படுவர் என்றும் இஸ்ரேல் அப்பொழுதும் சமாதானத்தையே விரும் புவதாகவும் அதையே தொடர்ந்து கடைப்பிடிக்கு மென்றும் அவர் சொன்னர்.

பாகிஸ்தான் — இந்திய சீன-இந்திய பிரச்னைகளில் இலங்கை அரசாங்கம் இவ் விதம்நடந்து கொள்ளவில்லை என்றும் இஸ்ரேல் பிரச்னை யில் உறவைத் துண்டிக்கும் இவ்வித திடீர் முடிவு கவ லையை அளிக்கிறது என்றும் அவர் கூறினர்.

— —

## பாரிஸில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கென ஒரு தமிழ்ச்சங்கம் அமைத்துச் செயல்பட்டு வருகிறர்கள். இவை யாவும் தமிழ்மொழி உலகில் பரவி வருவதற்கும், தமிழ்மக்கள் ஓரளவில் விழிப்புற்று வரு கிருர்கள் என்பதற்கும் சான்றுகளாகும் எனக் கூறினர்.

## அரசியல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் புதிய அரசியல்திட்டம் அமையும் என்றும் டாக்டர் கொல்வின் தெரிவித்தார்.

இன்று ஆட்சிமன்ற நிகழ் ச்சிகள் நடைபெற்றபோது திரு. ஜே ஆர். ஜெய வர்த்தன பேசுகையில், அர சியல் நிர்ணயசபை உறுப் பினர்களாக இயங்கிவரும் ஆட்சிமன்ற உறுப்பினர் களுக்கு விசேஷ (அலவன்ஸ்) கொடுக்கப்பட வேண்டும் என்றும் சபை நிகழ்ச்சிகளை ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பேசுகையில் தமிழிலும் ஒரே நேரத்தில் நிகழ்ச்சிகள் மொழி பெயர்க்கப்பட வேண்டும் என்ருர்

அமைச்சர் டாக்டர்கொல் வின் இதற்குப் பதிலளித் துப் பேசுகையில் கூறிய தாவது:

''தேசிய ஒருமைப்பாட் டுக்கு அமைய சபை நிகழ்ச் சிகள் நடைபெற்றுவருகின் றன. தற்போதுசிங்களத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள் தமிழிலும் மொழிபெயர்க் கப்படுகின்றன. மும்மொழி களிலும் நிகழ்ச்சிகளைமொழி பெயர்ப்பது சம்பந்தமாக பின்னர் ஆலோசனை செய்து முடிவெடுக்கலாம். ஆயினும் இதைக்கடைப்பிடிப்பது சிரமமாகஇருக்கும் என நம்புகிறேன்'' என்ருர்.

இன்றைய கூட்டத்தில் அரசியல் நிர்ணயசபை செயலாளரும், உதவிச் செயலாளரும் தெரிவு செய்யப்பட்டனர். திரு. வால்டர் ஜயவர்த்தன செயலாளராகவும், சபை லிகிதர் சாம் விஜயசிங்கா உபசெயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

றை வர்ணப் படங்களாக இந்திய அரசாங்க தகவல் இலாகாவோ அல்லது படா திபதிகளோ பிடிக்க முடி யாதா? ஸ்தல புராணக் கதைகளையும் மக்கள் மன தில் பதியும் வகையில் பட மாக்குவதாயின். அது பல

0 0 0

உன்னையொழிய ஒருவரை யும் நம்புகிலேன், பின்னை ஒருவரையான் பின் செல் லேன், பன்னிருகைக் கோல ப்பா, வானேர் கொடிய வினை தீர்த்தருளும் வேல ப்பா செந்தி வாழ்வே.

இ. போ. ச. பஸ் ஊழியர்

# இடையூறில்லாது கடமை செய்ய நடவடிக்கை

## கோண்டாவில்டிப்போ அதிகாரி உறுதி

நல்லூர், புதன்

கோண்டாவில் இ.போ.ச டிப்போ பஸ் ஊழியர்களை டிபபோ மேலதிகாரிகள் தாம் நினைத்தபடியேகடந்த காலத்தில் சேவை ஆற்றும் படி கட்டளை இட்டு வந்த தாக ஆட்சேபித்து தொழி லாளர் எல்லாரும் ஒன்று சேர்ந்து டிப்போ அத்தி ட்சகருக்கு முறையிட்ட னர்.

இதனைத் தொடர்ந்து டிப்போ அத்தியட்சகர் எல்லாத் தொழிலாளரை யும் சேர்த்து டிப்போ அலுவலகத்தில் மகாநாடு கூட்டி இனிமேல் தொழிலா ளரது சூழ்நிலையையும். அவர் களின் தராதரத்தையும் பொறுத்து அவர்களுக்கு எந்தவிதமான இடையூறும் ஏற்படாதவாறு சேவையில் ஈடுபடுத்துவதாக மேல் அதி காரி உறுதியளித்தார்.

எதிர் வரும்ஆடி அமாவா சைத் தினத்தன்று கீரிமலை யில நடைபெறும் தீர்த்தத் திருவிழாவன்று மாவையி லிருந்து எல்லாப் பகுதிகளுக் கும் இ. போ. ச. பஸ்களை சேவையிலீடுபடுத்த வேண் டிய ஒழுங்குகள் செய்யப் படுகின்றன

## 'தேசிய ரீதியில் இணைய வேண்டும்'

ஊரதிவு, புதன்

இன்றைய காலகட்டத் தில் ஐக்கிய முன்னணி அரசு வகு புத்துவேசத்தைத் தூர வீசி எறிந்துவிட்டு தொழி லாளர்களினதும் விவசாயி களதும் முன்னேற்றத்திற் காகவும் நாட்டுப் பொரு ளாதார சமூக வளர்ச்சிக் காகவும் ஒத்துழைக்க முன் வந்துள்ளது. இந்த நல்ல பெறற்கரிய திருப்பத்தை இலங்கையில் வாழும் நாட் டுப்பற்று மிக்க ஒவ்வொரு வரும் வரவேற்றுத்தான் ஆகவேண்டும்.''

கடந்த பொதுத்தேர்த லில் ஊர்காவற்றுறைத் தொகுதியில் போட்டியிட்ட வழக்கறிஞர் ப. கதிரவேலு விடுத்துள்ள அறிக்கையொ ன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:-

''கடந்த இருபத்திரண்டு ஆண்டுகளாக தமிழர்கள் அரசாங்கத்துக்கு எதிராக இயக்கங்கள் நடத்தியும் நடவடிக்கை எடுத்தும் கண்ட பலன் என்ன? மேலும் மேலும் தமிழர்களுக்குத் தீராத துன்பத்தை தமிழ் அரசியல்வாதிகள் ஏற்படுத் தினர்களே தவிர வேறென் றும் செய்யவில்லை. இவற் றைச் சிந்தித்து நமதுநாடு முன்னேற வேண்டுமென்ற பெருவிருப்பின் காரணமாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி யில்இணைந்தேன். ஒவ்வொரு தமிழனும் தேசிய ரீதியில் சிங்கள மக்களுடன் இணைய வேண்டும்''

— —

## உப்பளம் அரசிடம் கையளிக்கப்படும்

சங்கானை, வியாழன்

வலி மேற்கு ப. நோ. கூ. ச. சமாஜத்தின்கீழ் இயங்கி வரும் கல்லுண்டாய் உப் பளம் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட விருப்பதா கத்தெரியவருகிறது. இதற் கான நடவடிக்கைகளை மேற் கொண்டு சமாசத்தலைவர் தொழில் அமைச்சர் திரு ரி பி சுபசிங்காவுடன் பேச்சுவார்த்தை நடத்து வதற்காகக்கொழும்பு சென் றுள்ளார்:

உப்புக்கூட்டுஸ்தாபனம் கல்லுண்டாய் உப்பளத்தை பொறுப்பேற்கும் பட்சத் தில் சமாசம் வருடாவரு டம் எழுபதினுயிரம் ரூபாயை கட்டுப்படுத்து வதற்கும் அதனைச் சேமிப்ப தற்கும் வாய்ப்பு ஏற்படு மென எதிர்பார்க்கப்படு கிறது: இத்திட்டத்திற்கு அரசாங்கம் ஏற்கனவே ஆறு லட்சம் ரூபா கடனுக வழங் கியிருந்தது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org